**thEvAram / thiruvAsagam collection for group recitation**

**Note:** In many places the text has been formatted to separate the words to make it easy to recite as a group and easily understand the meaning. Thus, the formatting in this document often differs from the formal format of the original literary style text.

**Pronunciation**: If there is a pause between words, then the last pure hard consonant ‘k’, ‘c’, ‘th’, ‘p’ (**க்,ச்,த்,ப்**) should be left silent. (eg. “thEnaip, pAlaik, kannalin” should be said like “thEnai, pAlai, kannalin”). They are pronounced if the words are said without a pause between them.

**Ragam**: Most thEvAram songs have predefined ragams. However, there are no predefined Ragams for thiruvAsagam songs. I have indicated some ragams in which I have heard these songs sung.

**padhigams**: , , , ,

சமயாசாரியர்கள் துதி....2
திருவாசகம் ....3
8.00 - திருவாசகச் சிறப்பு ....3
8.01 - சிவபுராணம்....3
8.04 - போற்றித் திரு-அகவல்....6
8.05 - திருச்சதகம் - 6. அனுபோக சுத்தி....11
8.05 - திருச்சதகம் - 7. காருண்யத்திரங்கல்....13
8.06 - நீத்தல் விண்ணப்பம்....14
8.08 - திருவம்மானை ....16
8.10 - திருக்கோத்தும்பி....19
8.16 - திருப்பொன்னூசல் ....22
8.21 - கோயில் மூத்த திருப்பதிகம் ....24
8.22 - கோயில் திருப்பதிகம் ....25
8.24 - அடைக்கலப் பத்து....28
8.29 - அருட் பத்து....30
8.35 - அச்சப் பத்து ....32
8.20 - திருப்பள்ளி எழுச்சி....33
8.07 - திருவெம்பாவை....36
தேவாரம்....43
6.5 - போற்றித் திருத்தாண்டகம் - (எல்லாம் சிவனென்ன)....43
6.32 - போற்றித் திருத்தாண்டகம் - (கற்றவர்கள் உண்ணும்) ....45
6.55 - போற்றித் திருத்தாண்டகம் - (வேற்றாகி விண்ணாகி)....47
2.85 - கோளறு பதிகம் - (வேயுறு தோளிபங்கன்)....51
2.66 - திருநீற்றுப் பதிகம் - (மந்திரம் ஆவது நீறு)....53
4.11 - நமச்சிவாய பதிகம் - (சொற்றுணை வேதியன்) ....55
7.48 - நமச்சிவாய பதிகம் - (மற்றுப் பற்று)....56
3.22 - பஞ்சாக்கரப் பதிகம் - (துஞ்சலும் துஞ்சல் இலாத) ....58
3.49 - நமச்சிவாய பதிகம் - (காதலாகிக் கசிந்து)....60
4.1 - கூற்றாயினவாறு....62

5.4 - வட்டனைம் மதி சூடியை ........ 64
5.42 - நன்று நாள்தொறும் ........ 65
1.92 - வாசி தீரவே ........ 67
5.60 - ஏதும் ஒன்றும் ........ 68
5.1 - அன்னம் பாலிக்கும் ........ 69
5.99 - பாவமும் பழி பற்றற ........ 70
7.28 - பொடியார் மேனியனே ........ 72
7.91 - பாட்டும் பாடி ........ 73
5.90 - மாசில் வீணையும் ........ 75
3.97 - திடமலி மதிளணி ........ 76
திருமுறைகள் 8 - 12 (சில பாடல்கள்) ........ 77
வாழ்த்து ........ 81

## சமயாசாரியர்கள் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி
ஆழிமிசைக் கல்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி
வாழிதிரு நாவலூர் வன்தொண்டர் பதம்போற்றி
ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி
- ( உமாபதி சிவம் )

11.34.42 பெறுவது நிச்சயம் அஞ்சல் நெஞ்சே, பிரமாபுரத்து 1223
மறுவறு பொற்கழல் ஞானசம்பந்தனை வாழ்த்துதலால்,
வெறியுறு கொன்றை மறியுறு செங்கை, விடையெடுத்த
பொறியுறு பொற்கொடி எம்பெருமான் அமர் பொன்னுலகே.
- ( ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பிகள் )

11.33.24 நற்றவன், நல்லூர்ச் சிவன் திருப்பாதம் தன் சென்னி வைக்கப் 1116
பெற்றவன், மற்று இப்பிறப்பற வீரட்டர் பெய்கழற்றாள்
உற்றவன், உற்ற விடம் அடையார் இட ஒள்ளமுதாத்
துற்றவன், ஆமூரில் நாவுக்கரசு எனும் தூ மணியே.
- ( திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பிகள் )

11.33.08 தொழுதும் வணங்கியும் மாலயன் தேடு அருஞ்சோதி சென்று, ஆங்கு 1100
எழுதும் தமிழ்ப் பழ ஆவணம் காட்டி, எனக்கு உன் குடி
முழுதும் அடிமை, வந்து ஆட்செய் எனப் பெற்றவன், முரல் தேன்
ஒழுகும் மலரின் நற்றார் எம்பிரான் நம்பி ஆரூரனே.
- ( திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பிகள் )

## திருவாசகம்

## 8.00 - திருவாசகச் சிறப்பு

தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லல் அறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

**08.001**

## 8.01 - சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

1. நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
2. இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
3. கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
4. ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
5. ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க

6. வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
7. பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
8. புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
9. கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
10. சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க

11. ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
12. தேசன் அடி போற்றி சிவன் சேவடி போற்றி
13. நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
14. மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
15. சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி
16. ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

17. சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
18. அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
19. சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
20. முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

21. கண் நுதலான்தன் கருணைக் கண்காட்ட வந்து எய்தி
22. எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
23. விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய், விளங்கு ஒளியாய்,

24.எண் இறந்து எல்லை இலாதானே  நின் பெருஞ்சீர்
25.பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

26.புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
27.பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
28.கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
29.வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
30.செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

31.எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
32.மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
33.உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
34.மெய்யா  விமலா  விடைப்பாகா  வேதங்கள்
35.ஐயா  என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

36.வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
37.பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
38.மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச் சுடரே
39.எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
40.அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

41.ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
42.ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
43.போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பில்
44.நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
45.மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

46.கறந்த பால் கன்னலொடு நெய் கலந்தாற் போலச்
47.சிறந்து அடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
48.பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
49.நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
50.மறைந்திருந்தாய், எம்பெருமான்  வல்வினையேன் தன்னை

51.மறைந்திட மூடிய மாய இருளை
52.அறம் பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டி
53.புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
54.மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
55.மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

56.விலங்கு மனத்தால், விமலா  உனக்கு
57.கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்

58.நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
59.நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
60.நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

61.தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
62.மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
63.தேசனே தேனார் அமுதே சிவபுரனே
64.பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
65.நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

66.பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
67.ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
68.ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
69.நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
70.இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

71.அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
72.சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
73.ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
74.ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
75.கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

76.நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
77.போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
78.காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
79.ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
80.தோற்றச் சுடர் ஒளியாய் சொல்லாத நுண் உணர்வாய்

81.மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
82.தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
83.ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
84.வேற்று விகார விடக்கு உடம்பின் உள் கிடப்ப
85.ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

86.போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
87.மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
88.கள்ளப் புலக் குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
89.நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
90.தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

91.அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று

92.சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
93.சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
94.செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
95.பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**08.004**

## 8.04 - போற்றித் திரு-அகவல்

(தில்லையில் அருளியது)

1. நான்முகன் முதலா வானவர் தொழுது எழ
2. ஈரடி யாலே மூவுலகு அளந்து
3. நாற்றிசை முனிவரும் ஐம்புலன் மலர
4. போற்றி செய்கதிர் முடித்திரு நெடுமால் அன்று
5. அடிமுடி அறியும் ஆதரவு அதனில்
6. கடுமுரண் ஏனம் ஆகிமுன் கலந்து
7. ஏழ்தலம் உருவ இடந்துபின் எய்த்து
8. ஊழி முதல்வ சயசய என்று
9. வழுத்தியும் காணா மலரடி இணைகள்
10. வழுத்துதற்கு எளிதாய் வார்கடல் உலகினில்
11. யானை முதலா எறும்பு ஈறாய
12. ஊனமில் யோனியின் உள்வினை பிழைத்தும்
13. மானுடப் பிறப்பினுள் மாதா உதரத்து
14. ஈனமில் கிருமிச் செருவினில் பிழைத்தும்
15. ஒருமதித் தான்றியின் இருமையில் பிழைத்தும்
16. இருமதி விளைவின் ஒருமையில் பிழைத்தும்
17. மும்மதி தன்னுள் அம்மதம் பிழைத்தும்
18. ஈரிரு திங்களில் பேரிருள் பிழைத்தும்
19. அஞ்சு திங்களில் முஞ்சுதல் பிழைத்தும்
20. ஆறு திங்களில் ஊறலர் பிழைத்தும்
21. ஏழு திங்களில் தாழ்புவி பிழைத்தும்
22. எட்டுத் திங்களில் கட்டமும் பிழைத்தும்
23. ஒன்பதில் வருதரு துன்பமும் பிழைத்தும்
24. தக்க தசமதி தாயொடு தான்படும்
25. துக்க சாகரத் துயரிடைப் பிழைத்தும்
26. ஆண்டுகள் தோறும் அடைந்த அக்காலை
27. ஈண்டியும் இருத்தியும் எனைப்பல பிழைத்தும்
28. காலை மலமொடு கடும்பகல் பசிநிசி
29. வேலை நித்திரை யாத்திரை பிழைத்தும்
30. கருங்குழல் செவ்வாய் வெண்ணகைக் கார்மயில்
31. ஒருங்கிய சாயல் நெருங்கிஉள் மதர்த்துக்
32. கச்சற நிமிர்ந்து கதிர்த்து முன்பணைத்து
33. எய்த்து இடை வருந்த எழுந்து புடைபரந்து

34.ஈர்க்கிடை போகா இளமுலை மாதர்தம்
35.கூர்த்த நயனக் கொள்ளையில் பிழைத்தும்
36.பித்த உலகர் பெருந்துறைப் பரப்பினுள்
37.மத்தக் களிறெனும் அவாவிடைப் பிழைத்தும்
38.கல்வி என்னும் பல்கடல் பிழைத்தும்
39.செல்வம் என்னும் அல்லலில் பிழைத்தும்
40.நல்குரவு என்னும் தொல்விடம் பிழைத்தும்
41.புல்வரம்பு ஆய பலதுறை பிழைத்தும்
42.தெய்வம் என்பதோர் சித்தம் உண்டாகி
43.முனிவி லாததோர் பொருளது கருதலும்
44.ஆறு கோடி மாயா சத்திகள்
45.வேறு வேறுதம் மாயைகள் தொடங்கின
46.ஆத்தம் ஆனார் அயலவர் கூடி
47.நாத்திகம் பேசி நாத்தழும்பு ஏறினர்
48.சுற்றம் என்னும் தொல்பசுக் குழாங்கள்
49.பற்றி அழைத்துப் பதறினர் பெருகவும்
50.விரதமே பரம் ஆக வேதியரும்
51.சரதம் ஆகவே சாத்திரம் காட்டினர்
52.சமய வாதிகள் தத்தம் மதங்களில்
53.அமைவ தாக அரற்றி மலைந்தனர்
54.மிண்டிய மாயா வாதம் என்னும்
55.சண்ட மாருதம் சுழித்தடித்து ஆஅர்த்து
56.உலகாயதன் எனும் ஒண்திறல் பாம்பின்
57.கலா பேதத்த கடுவிடம் எய்தி
58.அதிற்பெரு மாயை எனைப்பல சூழவும்
59.தப்பாமே தாம் பிடித்தது சலியா
60.தழலது கண்ட மெழுகது போல
61.தொழுதுளம் உருகி அழுதுடல் கம்பித்து
62.ஆடியும் அலறியும் பாடியும் பரவியும்
63.கொடியுறும் பேதையும் கொண்டது விடாது எனும்
64.படியே யாகிநல் இடையறா அன்பின்
65.பசுமரத் தாணி அறைந்தாற் போல
66.கசிவது பெருகிக் கடல் என மறுகி
67.அகம் குழைந்து அனுகுலமாய் மெய் விதிர்த்துச்
68.சகம் பேய் என்று தம்மைச் சிரிப்ப
69.நாணது ஒழிந்து நாடவர் பழித்துரை
70.பூணது வாகக் கோணுதல் இன்றிச்
71.சதுர் இழந்து அறிமால் கொண்டுசாரும்
72.கதியது பரமா அதிசய மாக
73.கற்றா மனம் எனக் கதறியும் பதறியும்
74.மற்றோர் தெய்வம் கனவிலும் நினையாது

75.அருபரத்து ஒருவன் அவனியில் வந்து
76.குருபரன் ஆகி அருளிய பெருமையை
77.சிறுமை என்று இகழாதே திருவடி இணையைப்
78.பிறிவினை அறியா நிழலது போல
79.முன்பின் ஆகி முனியாது அத்திசை
80.என்புநைந்து உருகி நெக்குநெக்கு ஏங்கி
81.அன்பெனும் ஆறு கரையது புரள
82.நன்புலன் ஒன்றி நாத என்று அரற்றி
83.உரை தடுமாறி உரோமம் சிலிர்ப்ப
84.கரமலர் மொட்டித்து இருதயம் மலர
85.கண்களி கூர நுண்துளி அரும்ப
86.சாயா அன்பினை நாள்தொறும் தழைப்பவர்
87.தாயே ஆகி வளர்த்தனை போற்றி
88.மெய்தரு வேதியன் ஆகி வினைகெட
89.கைதர வல்ல கடவுள் போற்றி
90.ஆடக மதுரை அரசே போற்றி
91.கூடல் இலங்கு குருமணி போற்றி
92.தென்தில்லை மன்றினுள் ஆடி போற்றி
93.இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி
94.மூவா நான்மறை முதல்வா போற்றி
95.சேவார் வெல்கொடிச் சிவனே போற்றி
96.மின்னார் உருவ விகிர்தா போற்றி
97.கல்நார் உரித்த கனியே போற்றி
98.காவாய் கனகக் குன்றே போற்றி
99.ஆவா என்தனக்கு அருளாய் போற்றி
100. படைப்பாய் காப்பாய் துடைப்பாய் போற்றி
101. இடரைக் களையும் எந்தாய் போற்றி
102. ஈச போற்றி இறைவ போற்றி
103. தேசப் பளிங்கின் திரளே போற்றி
104. அரைசே போற்றி அமுதே போற்றி
105. விரைசேர் சரண விகிர்தா போற்றி
106. வேதி போற்றி விமலா போற்றி
107. ஆதி போற்றி அறிவே போற்றி
108. கதியே போற்றி கனியே போற்றி
109. நதிசேர் செஞ்சடை நம்பா போற்றி
110. உடையாய் போற்றி உணர்வே போற்றி
111. கடையேன் அடிமை கண்டாய் போற்றி
112. ஐயா போற்றி அணுவே போற்றி
113. சைவா போற்றி தலைவா போற்றி
114. குறியே போற்றி குணமே போற்றி
115. நெறியே போற்றி நினைவே போற்றி

116. வானோர்க்கு அரிய மருந்தே போற்றி
117. ஏனோர்க்கு எளிய இறைவா போற்றி
118. மூவேழ் சுற்றம் முரணுறு நரகிடை
119. ஆழா மேயருள் அரசே போற்றி
120. தோழா போற்றி துணைவா போற்றி
121. வாழ்வே போற்றி என் வைப்பே போற்றி
122. முத்தா போற்றி முதல்வா போற்றி
123. அத்தா போற்றி அரனே போற்றி
124. உரை உணர்வு இறந்த ஒருவ போற்றி
125. விரிகடல் உலகின் விளைவே போற்றி
126. அருமையில் எளிய அழகே போற்றி
127. கருமுகில் ஆகிய கண்ணே போற்றி
128. மன்னிய திருவருள் மலையே போற்றி
129. என்னையும் ஒருவன் ஆக்கி இருங்கழல்
130. சென்னியில் வைத்த சேவக போற்றி
131. தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
132. அழிவிலா ஆனந்த வாரி போற்றி
133. அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
134. முழுவதும் இறந்த முதல்வா போற்றி
135. மானேர் நோக்கி மணாளா போற்றி
136. வானகத்து அமரர் தாயே போற்றி
137. பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
138. நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
139. தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
140. வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
141. வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
142. அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி
143. கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
144. நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி
145. இடைமருது உறையும் எந்தாய் போற்றி
146. சடையிடைக் கங்கை தரித்தாய் போற்றி
147. ஆரூர் அமர்ந்த அரசே போற்றி
148. சீரார் திருவை யாறா போற்றி
149. அண்ணாமலை எம் அண்ணா போற்றி
150. கண்ணார் அமுதக் கடலே போற்றி
151. ஏகம்பத்து உறை எந்தாய் போற்றி
152. பாகம் பெண்ணுரு ஆனாய் போற்றி
153. பராய்த்துறை மேவிய பரனே போற்றி
154. சிராப்பள்ளி மேவிய சிவனே போற்றி
155. மற்றோர் பற்றிங்கு அறியேன் போற்றி
156. குற்றாலத்து எம் கூத்தா போற்றி

157. கோகழி மேவிய கோவே போற்றி
158. ஈங்கோய் மலை எம் எந்தாய் போற்றி
159. பாங்கார் பழனத்து அழக போற்றி
160. கடம்பூர் மேவிய விடங்கா போற்றி
161. அடைந்தவர்க்கு அருளும் அப்பா போற்றி
162. இத்தி தன்னின் கீழ் இரு மூவர்க்கு
163. அத்திக்கு அருளிய அரசே போற்றி
164. தென்னாடு உடைய சிவனே போற்றி
165. எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி
166. ஏனக் குருளைக்கு அருளினை போற்றி
167. மானக் கயிலை மலையாய் போற்றி
168. அருளிட வேண்டும் அம்மான் போற்றி
169. இருள்கெட அருளும் இறைவா போற்றி
170. தளர்ந்தேன் அடியேன் தமியேன் போற்றி
171. களங்கொளக் கருத அருளாய் போற்றி
172. அஞ்சேல் என்றிங்கு அருளாய் போற்றி
173. நஞ்சே அமுதாய் நயந்தாய் போற்றி
174. அத்தா போற்றி ஐயா போற்றி
175. நித்தா போற்றி நிமலா போற்றி
176. பத்தா போற்றி பவனே போற்றி
177. பெரியாய் போற்றி பிரானே போற்றி
178. அரியாய் போற்றி அமலா போற்றி
179. மறையோர் கோல நெறியே போற்றி
180. முறையோ தரியேன் முதல்வா போற்றி
181. உறவே போற்றி உயிரே போற்றி
182. சிறவே போற்றி சிவமே போற்றி
183. மஞ்சா போற்றி மணாளா போற்றி
184. பஞ்சேர் அடியாள் பங்கா போற்றி
185. அலந்தேன் நாயேன் அடியேன் போற்றி
186. இலங்கு சுடர் எம் ஈசா போற்றி
187. கவைத்தலை மேவிய கண்ணே போற்றி
188. குவைப்பதி மலிந்த கோவே போற்றி
189. மலைநாடு உடைய மன்னே போற்றி
190. கலையார் அரிகே சரியாய் போற்றி
191. திருக்கழுக் குன்றின் செல்வா போற்றி
192. பொருப்பு அமர் பூவணத்து அரனே போற்றி
193. அருவமும் உருவமும் ஆனாய் போற்றி
194. மருவிய கருணை மலியே போற்றி
195. துரியமும் இறந்த சுடரே போற்றி
196. தெரிவரிது ஆகிய தெளிவே போற்றி
197. தோளா முத்தச் சுடரே போற்றி

198. ஆளா னவர்கட்கு அன்பா போற்றி
199. ஆரா அமுதே அருளே போற்றி
200. பேர் ஆயிரமுடைப் பெம்மான் போற்றி
201. தாளி அறுகின் தாராய் போற்றி
202. நீளொளி யாகிய நிருத்தா போற்றி
203. சந்தனச் சாந்தின் சுந்தர போற்றி
204. சிந்தனைக்கு அரிய சிவமே போற்றி
205. மந்திர மாமலை மேயாய் போற்றி
206. எந்தமை உய்யக் கொள்வாய் போற்றி
207. புலிமுலை புல்வாய்க்கு அருளினை போற்றி
208. அலைகடல் மீமிசை நடந்தாய் போற்றி
209. கருங்குருவிக்கு அன்று அருளினை போற்றி
210. இரும்புலன் புலர இசைந்தனை போற்றி
211. படியுறப் பயின்ற பாவக போற்றி
212. அடியொடு நடுஈறு ஆனாய் போற்றி
213. நரகொடு சுவர்க்கம் நானிலம் புகாமல்
214. பரகதி பாண்டியற்கு அருளினை போற்றி
215. ஒழிவற நிறைந்த ஒருவ போற்றி
216. செழுமலர்ச் சிவபுரத்து அரசே போற்றி
217. கழுநீர் மாலைக் கடவுள் போற்றி
218. தொழுவார் மையல் துணிப்பாய் போற்றி
219. பிழைப்பு வாய்ப்பு ஒன்று அறியா நாயேன்
220. குழைத்த சொல்மாலை கொண்டருள் போற்றி
221. புரம்பல எரித்த புராண போற்றி
222. பரம்பரஞ்சோதிப் பரனே போற்றி
223. போற்றி போற்றி புயங்கப் பெருமான்
224. போற்றி போற்றி புராண காரண
225. போற்றி போற்றி சயசய போற்றி.

**08.005**

### 8.05 - திருச்சதகம் - 6. அனுபோக சுத்தி

(திருப்பெருந்துறையில் அருளியது)

(அந்தாதி)

51. ஈசனே என் எம்மானே எந்தை பெருமான், என் பிறவி 51-60
நாசனே, நான் யாதும் ஒன்று அல்லாப் பொல்லா நாயான
நீசனேனை ஆண்டாய்க்கு நினைக்க மாட்டேன் கண்டாயே,
தேசனே, அம்பலவனே, செய்வது ஒன்றும் அறியேனே.

52. செய்வது அறியாச் சிறு நாயேன், செம்பொற் பாதமலர் காணா
பொய்யர் பெறும் பேறு அத்தனையும் பெறுதற்கு உரியேன், பொய்யிலா

மெய்யர் வெறியார் மலர்ப்பாதம் மேவக் கண்டும் கேட்டிருந்தும்,
பொய்யனேன் நான் உண்டு உடுத்து இங்கிருப்பதானேன் போரேறே.

53.போரேறே, நின் பொன்னகர்வாய் நீ போந்தருளி இருள் நீக்கி,
வாரேறு இளம் மென்முலையாளொடு உடன் வந்தருள, அருள்பெற்ற
சீரேறு அடியார் நின் பாதம் சேரக் கண்டும், கண்கெட்ட
ஊரேறாய் இங்கு உழல்வேனோ, கொடியேன் உரிதான் உலவாதே.

54.உலவாக் காலம் தவம் எய்தி உறுப்பும் வெறுத்து, இங்கு உனைக் காண்பான்
பலமா முனிவர் நனி வாடப், பாவியேனைப் பணிகொண்டாய்,
மலமாக் குரம்பை இது மாய்க்க மாட்டேன், மணியே உனைக் காண்பான்
அலவா நிற்கும் அன்பிலேன், என்கொண்டு எழுகேன் எம்மானே.

55.மானேர் நோக்கி உமையாள் பங்கா, வந்திங்கு ஆட்கொண்ட
தேனே, அமுதே, கரும்பின் தெளிவே, சிவனே, தென்தில்லைக்
கோனே, உன்றன் திருக்குறிப்புக் கூடுவார் நின் கழல் கூட,
ஊனார் புழுக்கூடு இதுகாத்து இங்கு இருப்பதானேன் உடையானே.

56.உடையானே, நின்றனை உள்கி உள்ளம் உருகும் பெருங்காதல்
உடையார் உடையாய், நின் பாதம் சேரக் கண்டு இங்கு ஊர் நாயின்
கடையானேன், நெஞ்சு உருகாதேன், கல்லா மனத்தேன், கசியாதேன்,
முடையார் புழுக்கூடு இதுகாத்து இங்கு இருப்பதாக முடித்தாயே.

57.முடித்தவாறும் என்றனக்கே தக்கதே, முன் அடியாரைப்
பிடித்தவாறும் சோராமல் சோரனேன், இங்கு ஒருத்திவாய்
துடித்தவாறும், துகில் இறையே சோர்ந்தவாறும், முகங் குறுவேர்
பொடித்தவாறும், இவை உணர்ந்து கேடு என்றனக்கே சூழ்ந்தேனே.

58.தேனைப், பாலைக், கன்னலின் தெளியை, ஒளியைத், தெளிந்தார்தம்
ஊனை உருக்கும் உடையானை, உம்பரானை, வம்பனேன்
நான், நின் அடியேன் நீ என்னை ஆண்டாய் என்றால், அடியேற்கு
தானும் சிரித்தே அருளலாம் தன்மையாம் என் தன்மையே.

59.தன்மை பிறரால் அறியாத தலைவா, பொல்லா நாயான
புன்மையோனை ஆண்டு, ஐயா புறமே போக விடுவாயோ,
என்னை நோக்குவார் யாரே, என் நான் செய்கேன், எம்பெருமான்,
பொன்னே திகழும் திருமேனி எந்தாய், எங்குப் புகுவேனே.

60.புகுவேன், எனதே நின் பாதம், போற்றும் அடியாருள் நின்று,
நகுவேன் பண்டு தோள் நோக்கி நாணம் இல்லா நாயினேன்,
நெகும் அன்பு இல்லை நினைக் காண, நீ ஆண்டு அருள அடியேனும்

தகுவனே, என் தன்மையே எந்தாய், அந்தோ தரியேனே.

**08.005**

## 8.05 - திருச்சதகம் - 7. காருண்யத்திரங்கல்

(திருப்பெருந்துறையில் அருளியது)

61.தரிக்கிலேன் காய வாழ்க்கை, சங்கரா போற்றி, வான 61-70
விருத்தனே போற்றி, எங்கள் விடலையே போற்றி, ஒப்பில்
ஒருத்தனே போற்றி, உம்பர் தம்பிரான் போற்றி, தில்லை
நிருத்தனே போற்றி, எங்கள் நின்மலா போற்றி போற்றி.

62.போற்றியோ நமச் சிவாய, புயங்கனே மயங்குகின்றேன்,
போற்றியோ நமச் சிவாய, புகலிடம் பிறிதொன்றில்லை,
போற்றியோ நமச் சிவாய, புறமெனைப் போக்கல் கண்டாய்,
போற்றியோ நமச் சிவாய, சயசய போற்றி போற்றி.

63.போற்றி என்போலும் பொய்யர்தம்மை ஆட்கொள்ளும் வள்ளல்,
போற்றி நின் பாதம், போற்றி நாதனே போற்றி போற்றி,
போற்றி நின் கருணை வெள்ளப் புதுமதுப், புவனம் நீர் தீ
காற்று இயமானன் வானம் இருசுடர்க் கடவுளானே.

64.கடவுளே போற்றி, என்னைக் கண்டுகொண்டு அருளு போற்றி,
விடவுளே உருக்கி என்னை ஆண்டிட வேண்டும் போற்றி,
உடல் இது களைந்திட்டு ஒல்லை உம்பர் தந்து அருளு போற்றி
சடையுளே கங்கை வைத்த சங்கரா போற்றி போற்றி.

65.சங்கரா போற்றி, மற்றோர் சரண் இலேன் போற்றி, கோலப்
பொங்கரா அல்குல் செவ்வாய் வெண்ணகைக் கரிய வாட்கண்
மங்கையோர் பங்க போற்றி, மால்விடை ஊர்தி போற்றி,
இங்கிவ்வாழ்வு ஆற்றகில்லேன் எம்பிரான், இழித்திட்டேனே.

66.இழித்தனன் என்னை யானே எம்பிரான் போற்றி போற்றி,
பழித்திலேன் உன்னை என்னை ஆளுடைப் பாதம் போற்றி,
பிழைத்தவை பொறுக்கை எல்லாம் பெரியவர் கடமை போற்றி,
ஒழித்திடு இவ்வாழ்வு போற்றி, உம்பர்நாட்டு எம்பிரானே.

67.எம்பிரான் போற்றி, வானத்து அவரவர் ஏறு போற்றி,
கொம்பரார் மருங்குல் மங்கை கூற வெண்ணீற போற்றி,
செம்பிரான் போற்றி, தில்லைத் திருச்சிற்றம்பலவ போற்றி,
உம்பரா போற்றி, என்னை ஆளுடை ஒருவ போற்றி.

68. ஒருவனே போற்றி, ஒப்பில் அப்பனே போற்றி, வானோர்
குருவனே போற்றி, எங்கள் கோமளக் கொழுந்து போற்றி,
வருக என்று என்னை நின்பால் வாங்கிட வேண்டும் போற்றி,
தருக நின் பாதம் போற்றி தமியனேன் தனிமை தீர்த்தே.

69. தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்ப போற்றி,
பேர்ந்தும் என் பொய்ம்மை ஆட்கொண்டு அருளிடும் பெருமை போற்றி,
வார்ந்த நஞ்சு அயின்று வானோர்க்கு அமுதம் ஈ வள்ளல் போற்றி,
ஆர்ந்த நின் பாதம் நாயேற்கு அருளிட வேண்டும் போற்றி.

70. போற்றி இப்புவனம் நீர் தீக் காலொடு வானம் ஆனாய்,
போற்றி எவ்வுயிர்க்கும் தோற்றம் ஆகி நீ தோற்றம் இல்லாய்,
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாய் ஈறின்மை ஆனாய்,
போற்றி ஐம்புலன்கள் நின்னைப் புணர்கிலாப் புணர்க்கையானே.

**08.006**

## 8.06 - நீத்தல் விண்ணப்பம்

(உத்தரகோசமங்கையில் அருளியது)
(அந்தாதி)

1. கடையவனேனைக் கருணையினால் கலந்து ஆண்டுகொண்ட 1-10
விடையவனே, விட்டிடுதி கண்டாய், விறல் வேங்கையின் தோல்
உடையவனே, மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே,
சடையவனே, தளர்ந்தேன், எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே.

2. கொள்ளேர்பு இளவு அகலாத் தடங் கொங்கையர் கொவ்வைச் செவ்வாய்
விள்ளேன் எனினும், விடுதி கண்டாய், நின் விழுத்தொழும்பின்
உள்ளேன், புறம் அல்லேன், உத்தரகோச மங்கைக்கு அரசே,
கள்ளேன் ஒழியவும் கண்டுகொண்டு ஆண்டது எக்காரணமே.

3. கார்_உறு கண்ணியர் ஐம்புலன் ஆற்றங்கரை மரமாய்
வேர்_உறுவேனை, விடுதி கண்டாய், விளங்கும் திருவா
ரூர்_உறைவாய், மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே,
வார்_உறு பூண்முலையாள் பங்க, என்னை வளர்ப்பவனே.

4. வளர்கின்ற நின் கருணைக்கையில் வாங்கவும், நீங்கி இப்பால்
மிளிர்கின்ற என்னை, விடுதி கண்டாய், வெண்மதிக் கொழுந்து ஒன்று
ஒளிர்கின்ற நீள்முடி உத்தரகோச மங்கைக்கு அரசே,
தெளிகின்ற பொன்னும் மின்னும் அன்ன தோற்றச் செழுஞ்சுடரே.

5. செழிகின்ற தீப்புகு விட்டிலின் சின்மொழியாரில் பன்னாள்
விழுகின்ற என்னை, விடுதி கண்டாய், வெறிவாய் அறுகால்

உழுகின்ற பூமுடி உத்தரகோச மங்கைக்கு அரசே,
வழிநின்று நின்னருள் ஆரமுது ஊட்ட மறுத்தனனே.

6. மறுத்தனன் யான் உன்னருள் அறியாமையில், என் மணியே,
வெறுத்து எனை நீ விட்டிடுதி கண்டாய், வினையின் தொகுதி
ஒறுத்து எனை ஆண்டுகொள், உத்தரகோச மங்கைக்கு அரசே,
பொறுப்பர் அன்றே பெரியோர், சிறு நாய்கள்தம் பொய்யினையே.

7. பொய்யவனேனைப் பொருள் என ஆண்டு, ஒன்று பொத்திக்கொண்ட
மெய்யவனே, விட்டிடுதி கண்டாய், விடம் உண் மிடற்று
மையவனே, மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே,
செய்யவனே, சிவனே, சிறியேன் பவம் தீர்ப்பவனே.

8. தீர்க்கின்றவாறு என் பிழையை நின் சீரருள் என்கொல் என்று,
வேர்க்கின்ற என்னை விடுதி கண்டாய், விரவார் வெருவ
ஆர்க்கின்ற தார்விடை உத்தரகோச மங்கைக்கு அரசே,
ஈர்க்கின்ற அஞ்சொடு அச்சம் வினையேனை இருதலையே.

9. இருதலைக் கொள்ளியினுள் எறும்பு ஒத்து, நினைப் பிரிந்த
விரிதலையேனை விடுதி கண்டாய், வியன் மூவுலகுக்கு
ஒரு தலைவா, மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே,
பொருதலை மூவிலை வேல் வலன் ஏந்திப் பொலிபவனே.

10. பொலிகின்ற நின் தாள் புகுதப் பெற்று, ஆக்கையைப் போக்கப் பெற்று
மெலிகின்ற என்னை விடுதி கண்டாய், அளி தேர் விளரி
ஒலிநின்ற பூம்பொழில் உத்தரகோச மங்கைக்கு அரசே,
வலிநின்ற திண்சிலையால் எரித்தாய் புரம் மாறுபட்டே.

46. உழைதரு நோக்கியர் கொங்கைப் பலாப்பழத்து ஈயின் ஒப்பாய் 46-
விழைதருவேனை, விடுதி கண்டாய், விடின், வேலை நஞ்சு உண் 50
மழைதரு கண்டன், குணம் இலி, மானிடன், தேய்மதியன்,
பழைதரு மாபரன் என்றென்று அறைவன் பழிப்பினையே.

47. பழிப்பில் நின் பாதப் பழந்தொழும்பு எய்தி, விழப்பழித்து
விழித்து இருந்தேனை, விடுதி கண்டாய், வெண்மணிப் பணிலம்
கொழித்து மந்தார[ம்] மந்தாகினி நுந்தும் பந்தப் பெருமை,
தழிச்சிறை நீரிற் பிறைக்கலம் சேர்தரு தாரவனே.

48. தாரகை போலும் தலைத் தலைமாலைத் தழல் அரப்பூண்
வீர, என்தன்னை விடுதி கண்டாய், விடில், என்னை மிக்கார்
ஆரடியான் என்னின், உத்தரகோச மங்கைக்கு அரசின்

சீரடியார் அடியான் என்று நின்னைச் சிரிப்பிப்பனே.

49.சிரிப்பிப்பன் சீறும் பிழைப்பைத், தொழும்பையும் ஈசற்கு என்று
விரிப்பிப்பன், என்னை விடுதி கண்டாய், விடின், வெங்கரியின்
உரிப் பிச்சன், தோலுடைப் பிச்சன், நஞ்சூண் பிச்சன், ஊர்ச்சுடுகாட்டு
எரிப் பிச்சன், என்னையும் ஆளுடைப் பிச்சன் என்று ஏசுவனே.

50.ஏசினும் யான் உன்னை ஏத்தினும், என் பிழைக்கே குழைந்து
வேசறுவேனை, விடுதி கண்டாய், செம்பவள வெற்பின்
தேசுடையாய், என்னை ஆளுடையாய், சிற்றுயிர்க்கு இரங்கி
காய்சின ஆலமுண்டாய், அமுதுண்ணக் கடையவனே.

**08.008**

## 8.08 - திருவம்மானை

(திருவண்ணாமலையில் அருளியது)

1. செங்கண் நெடுமாலும் சென்றிடந்தும் காண்பரிய 1-10
பொங்கு மலர்ப்பாதம் பூதலத்தே போந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொண்டு
தெங்கு திரள் சோலைத் தென்னன் பெருந்துறையான்
அங்கணன் அந்தணனாய் அறைகூவி வீடருளும்
அங்கருணை வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

2. பாரார் விசும்புள்ளார் பாதாளத்தார் புறத்தார்
ஆராலும் காண்டற்கு அரியான் எமக்கெளிய
பேராளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றி
வாரா வழியருளி வந்தென் உளம்புகுந்த
ஆரா அமுதாய் அலைகடல்வாய் மீன்விசிறும்
பேராசை வாரியனைப் பாடுதுங்காண் அம்மானாய்.

3. இந்திரனும் மாலயனும் ஏனோரும் வானோரும்
அந்தரமே நிற்கச் சிவன் அவனி வந்தருளி
எந்தரமும் ஆட்கொண்டு தோள்கொண்ட நீற்றனாய்ச்
சிந்தனையை வந்துருக்கும் சீரார் பெருந்துறையான்
பந்தம் பரியப் பரிமேற்கொண்டான் தந்த
அந்தம் இலா ஆனந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.

4. வான் வந்த தேவர்களும் மாலயனோடு இந்திரனும்
கான் நின்று வற்றியும் புற்றெழுந்தும் காண்பரிய
தான் வந்து நாயேனைத் தாய்போல் தலையளித்திட்டு
ஊன் வந்து உரோமங்கள் உள்ளே உயிர்ப்பெய்து

தேன் வந்து அமுதின் தெளிவின் ஒளிவந்த
வான் வந்த வார்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

5. கல்லா மனத்துக் கடைப்பட்ட நாயேனை
வல்லாளன் தென்னன் பெருந்துறையான் பிச்சேற்றிக்
கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன்கருணை
வெள்ளத்து அழுத்தி வினைகடிந்த வேதியனைத்
தில்லை நகர்புக்குச் சிற்றம் பலமன்னும்
ஒல்லை விடையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

6. கேட்டாயோ தோழி கிறி செய்தவாறு ஒருவன்
தீட்டார் மதில் புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல்லாம் காட்டிச் சிவங்காட்டித்
தாட்டா மரைகாட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான்கொண்டு ஆண்டவா பாடுதுங்காண் அம்மானாய்.
(தாட்டாமரை = தாள் + தாமரை, ஆட்டான் = ஆள் + தான்)

7. ஓயாதே உள்குவார் உள்ளிருக்கும் உள்ளானைச்
சேயானைச் சேவகனைத் தென்னன் பெருந்துறையின்
மேயானை வேதியனை மாதிருக்கும் பாதியனை
நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனைத்
தாயான தத்துவனைத் தானே உலகேழும்
ஆயானை ஆள்வானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

8. பண் சுமந்த பாடல் பரிசு படைத்தருளும்
பெண் சுமந்த பாகத்தன் பெம்மான் பெருந்துறையான்
விண் சுமந்த கீர்த்தி வியன்மண்டலத்து ஈசன்
கண் சுமந்த நெற்றிக் கடவுள் கலிமதுரை
மண் சுமந்து கூலிகொண்டு அக்கோவால் மொத்துண்டு
புண் சுமந்த பொன்மேனி பாடுதுங்காண் அம்மானாய்.

9. துண்டப் பிறையான் மறையான் பெருந்துறையான்
கொண்ட புரிநூலான் கோலமா ஊர்தியான்
கண்டங் கரியான் செம்மேனியான் வெண்ணீற்றான்
அண்டமுதல் ஆயினான் அந்தமிலா ஆனந்தம்
பண்டைப் பரிசே பழவடியார்க்கு ஈந்தருளும்
அண்டம் வியப்புறுமா பாடுதுங்காண் அம்மானாய்.

10. விண்ணாளும் தேவர்க்கும் மேலாய வேதியனை
மண்ணாளும் மன்னவர்க்கும் மாண்பாகி நின்றானைத்

தண்ணார் தமிழளிக்கும் தண்பாண்டி நாட்டானைப்
பெண்ணாளும் பாகனைப் பேணு பெருந்துறையில்
கண்ணார் கழல்காட்டி நாயேனை ஆட்கொண்ட
அண்ணா மலையானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

11. செப்பார் முலைபங்கன் தென்னன் பெருந்துறையான் 11-20
தப்பாமே தாளடைந்தார் நெஞ்சுருக்கும் தன்மையினான்
அப்பாண்டி நாட்டைச் சிவலோகம் ஆக்குவித்த
அப்பார் சடையப்பன் ஆனந்த வார்கழலே
ஒப்பாக ஒப்புவித்த உள்ளத்தார் உள்ளிருக்கும்
அப்பாலைக்கு அப்பாலைப் பாடுதுங்காண் அம்மானாய்.
(செப்பார் = செப்பு + ஆர். அப்பார் = அப்பு + ஆர்)

12. மைப்பொலியும் கண்ணிகேள், மாலயனோடு இந்திரனும்
எப்பிறவியும் தேட, என்னையும் தன் இன்னருளால்
இப்பிறவி ஆட்கொண்டு, இனிப் பிறவாமே காத்து,
மெய்ப்பொருட்கண் தோற்றமாய் மெய்யே நிலைபேறாய்
எப்பொருட்கும் தானேயாய் யாவைக்கும் வீடாகும்
அப்பொருளாம் நம் சிவனைப் பாடுதுங்காண் அம்மானாய்.

13. கையார் வளைசிலம்பக் காதார் குழையாட,
மையார் குழல்புரளத் தேன்பாய வண்டொலிப்பச்,
செய்யானை வெண்ணீறு அணிந்தானைச், சேர்ந்தறியாக்
கையானை, எங்கும் செறிந்தானை, அன்பர்க்கு
மெய்யானை, அல்லாதார்க்கு அல்லாத வேதியனை,
ஐயாறு அமர்ந்தானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

14. ஆனையாய்க் கீடமாய் மானுடராய்த் தேவராய்
ஏனைப் பிறவாய்ப் பிறந்திறந்து எய்த்தேனை
ஊனையும் நின்றுருக்கி என்வினையை ஓட்டுகந்து
தேனையும் பாலையும் கன்னலையும் ஒத்து இனிய
கோனவன்போல் வந்தென்னைத் தன்தொழும்பில் கொண்டருளும்
வானவன் பூங்கழலே பாடுதுங்காண் அம்மானாய்.

15. சந்திரனைத் தேய்த்தருளித் தக்கன்தன் வேள்வியினில்
இந்திரனைத் தோள்நெரித்திட்டு எச்சன் தலையரிந்துச்
அந்தரமே செல்லும் அலர்கதிரோன் பல்தகர்த்து
சிந்தித் திசைதிசையே தேவர்களை ஓட்டுகந்த
செந்தார்ப் பொழில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
மந்தார மாலையே பாடுதுங்காண் அம்மானாய்.

16. ஊனாய் உயிராய் உணர்வாய் என்னுள் கலந்து
தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்
வானோர் அறியா வழியெமக்குத் தந்தருளும்
தேனார் மலர்க்கொன்றைச் சேவகனார் சீரொளிசேர்
ஆனா அறிவாய் அளவிறந்த பல்லுயிர்க்கும்
கோனாகி நின்றவர் கூறுதுங்காண் அம்மானாய்.

17. சூடுவேன் பூங்கொன்றை, சூடிச் சிவன்திரள்தோள்
கூடுவேன், கூடி முயற்சி மயங்கிநின்று
ஊடுவேன், செவ்வாய்க்கு உருகுவேன், உள்ளுருகித்
தேடுவேன், தேடிச் சிவன்கழலே சிந்திப்பேன்,
வாடுவேன், பேர்த்து[ம்] மலர்வேன், அனலேந்தி
ஆடுவான் சேவடியே பாடுதுங்காண் அம்மானாய்.

18. கிளிவந்த மென்மொழியாள் கேழ்கிளரும் பாதியனை
வெளிவந்த மாலயனும் காண்பரிய வித்தகனைத்
தெளிவந்த தேறலைச் சீரார் பெருந்துறையில்
எளிவந்து இருந்திரங்கி எண்ணரிய இன்னருளால்
ஒளிவந்து என் உள்ளத்தின் உள்ளே ஒளி திகழ
அளிவந்த அந்தணனைப் பாடுதுங்காண் அம்மானாய்.

19. முன்னானை மூவர்க்கும், முற்றுமாய் முற்றுக்கும்
பின்னானைப், பிஞ்ஞகனைப், பேணு பெருந்துறையின்
மன்னானை, வானவனை, மாதியலும் பாதியனை,
தென்னானைக் காவானைத், தென்பாண்டி நாட்டானை,
என்னானை, என்னப்பன் என்பார்கட்கு இன்னமுதை
அன்னானை, அம்மானைப் பாடுதுங்காண் அம்மானாய்.

20. பெற்றி பிறர்க்கரிய பெம்மான் பெருந்துறையான்,
கொற்றக் குதிரையின்மேல் வந்தருளித், தன்னடியார்
குற்றங்கள் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டிச்,
சுற்றிய சுற்றத் தொடர்வறுப்பான் தொல்புகழே
பற்றி,இப் பாசத்தைப் பற்றறநாம் பற்றுவான்,
பற்றிய பேரானந்தம் பாடுதுங்காண் அம்மானாய்.

**08.010**

## 8.10 - திருக்கோத்தும்பி

(தில்லையில் அருளியது)

1. பூவேறு கோனும் புரந்தரனும் பொற்பமைந்த 1-10
நாவேறு செல்வியும் நாரணனும் நான்மறையும்

மாவேறு சோதியும் வானவரும் தாமறியாச்
சேவேறு சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

2. நானார் என்னுள்ளம் ஆர் ஞானங்கள் ஆர் என்னை யார் அறிவார்
வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதிமயங்கி
ஊனார் உடை தலையில் உண்பலிதேர் அம்பலவன்
தேனார் கமலமே சென்றூதாய் கோத்தும்பீ.

3. தினைத்தனை உள்ளதோர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசுந்தொறும் எப்போதும்
அனைத்தெலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

4. கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என்னப்பன் என்னொப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்து என்னை வா என்ற வான்கருணைச்
சுண்ணப் பொன்னீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

5. அத்தேவர் தேவர் அவர்தேவர் என்று இங்ஙன்
பொய்த்தேவு பேசிப் புலம்புகின்ற பூதலத்தே
பத்தேதும் இல்லாதென் பற்றறநான் பற்றிநின்ற
மெய்த்தேவர் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

6. வைத்த நிதி பெண்டிர் மக்கள் குலம் கல்வி என்னும்
பித்த உலகிற் பிறப்போடு இறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

7. சட்டோ நினைக்க மனத்தமுதாம் சங்கரனைக்
கெட்டேன் மறப்பேனோ கேடுபடாத் திருவடியை
ஒட்டாத பாவித் தொழும்பரை நாம் உருவறியோம்
சிட்டாய சிட்டற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

8. ஒன்றாய் முளைத்தெழுந்து எத்தனையோ கவடுவிட்டு
நன்றாக வைத்தென்னை நாய்சிவிகை ஏற்றுவித்த
என்றாதை தாதைக்கும் எம்மனைக்கும் தம்பெருமான்
குன்றாத செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.
(என்றாதை = என் + தாதை. எம்மனை = எம் + அன்னை)

9. கரணங்கள் எல்லாம் கடந்து நின்ற கறைமிடற்றன்
சரணங்களே சென்று சார்தலுமே தான் எனக்கு

மரணம் பிறப்பென்று இவையிரண்டின் மயக்கறுத்த
கருணைக் கடலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

10. நோயுற்று மூத்துநான் நுந்துகன்றாய் இங்கிருந்து
நாயுற்ற செல்வம் நயந்தறியா வண்ணமெல்லாம்
தாயுற்று வந்தென்னை ஆண்டுகொண்ட தன்கருணைத்
தேயுற்ற செல்வற்கே சென்றூதாய் கோத்தும்பீ.
(நுந்து = தள்ளு. தேய்=தேசு=ஒளி.)

11. வன்னெஞ்சக் கள்வன் மனவலியன் என்னாதே 11-20
கன்னெஞ்சு உருக்கிக் கருணையினால் ஆண்டுகொண்ட
அன்னம் திளைக்கும் அணிதில்லை அம்பலவன்
பொன்னங் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.
(வன்னெஞ்சம் = வல் + நெஞ்சம். கன்னெஞ்சு = கல் + நெஞ்சு
அங்கழல் = அம் + கழல்)

12. நாயேனைத் தன்னடிகள் பாடுவித்த நாயகனைப்
பேயேனது உள்ளப் பிழைபொறுக்கும் பெருமையனைச்
சீயேதும் இல்லாதென் செய்பணிகள் கொண்டருளும்
தாயான ஈசற்கே சென்றூதாய் கோத்தும்பீ.

13. நான் தனக்கு அன்பின்மை நானும் தானும் அறிவோம்
தான் என்னை ஆட்கொண்டது எல்லாரும் தாமறிவார்
ஆன கருணையும் அங்குற்றே தான் அவனே
கோன் என்னைக் கூடக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

14. கருவாய் உலகினுக்கு அப்புறமாய் இப்புறத்தே
மருவார் மலர்க்குழல் மாதினொடும் வந்தருளி
அருவாய் மறைபயில் அந்தணனாய் ஆண்டுகொண்ட
திருவான தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ.

15. நானும் என் சிந்தையும் நாயகனுக்கு எவ்விடத்தோம்
தானும் தன் தையலும் தாழ்சடையோன் ஆண்டிலனேல்
வானும் திசைகளும் மாகடலும் ஆயபிரான்
தேனுந்து சேவடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

16. உள்ளப் படாத திருவுருவை உள்ளுதலும்
கள்ளப் படாத களிவந்த வான்கருணை
வெள்ளப் பிரான் எம்பிரான் என்னை வேறே ஆட்
கொள்ளப் பிரானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.
(ஆட்கொள்ளப்பிரான் = ஆட்கொள் + அப் பிரான்)

17. பொய்யாய செல்வத்தே புக்கழுந்தி நாள்தோறும்
மெய்யாக் கருதிக் கிடந்தேனை ஆட்கொண்ட
ஐயா என் ஆருயிரே அம்பலவா என்று அவன்தன்
செய்யார் மலரடிக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

18. தோலும் துகிலும் குழையும் சுருள்தோடும்
பால்வெள்ளை நீறும் பசுஞ்சாந்தும் பைங்கிளியும்
சூலமும் தொக்க வளையும் உடைத்தொன்மைக்
கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ.

19. கள்வன் கடியன் கலதி இவன் என்னாதே
வள்ளல் வரவர வந்தொழிந்தான் என்மனத்தே
உள்ளத்து உறுதுயர் ஒன்றொழியா வண்ணமெல்லாம்
தெள்ளும் கழலுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.

20. பூமேல் அயனோடு மாலும் புகலரிதென்று
ஏமாறி நிற்க அடியேன் இறுமாக்க
நாய்மேல் தவிசிட்டு நன்றாப் பொருட்படுத்தத்
தீமேனி யானுக்கே சென்றூதாய் கோத்தும்பீ.
(ஏமாறு = தடுமாறு)

**08.016**

## 8.16 - திருப்பொன்னூசல்

(உத்தரகோசமங்கையில் அருளியது)
(ராகம்: ஆனந்தபைரவி)

1. சீரார் பவளங்கால் முத்தம் கயிறாக 1-9
ஏராரும் பொற்பலகை ஏறி இனிதமர்ந்து
நாரா யணன்_அறியா நாண்மலர்த்தாள் நாயடியேற்கு
ஊராகத் தந்தருளும் உத்தர கோசமங்கை
ஆரா அமுதின் அருள்தாள் இணைபாடி
போரார்வேற் கண்மடவீர் பொன்னூசல் ஆடாமோ.

2. மூன்றங்கு இலங்கு நயனத்தன் மூவாத
வான் தங்கு தேவர்களும் காணா மலரடிகள்
தேன் தங்கித் தித்தித்து அமுதூறித் தான்தெளிந்தங்கு
ஊன் தங்கி நின்றுருக்கும் உத்தர கோசமங்கைக்
கோன் தங்கு இடைமருது பாடிக் குலமஞ்ஞை
போன்றங்கு அனநடையீர் பொன்னூசல் ஆடாமோ.

3. முன்னீறும் ஆதியும் இல்லான் முனிவர்குழாம்

பன்னூறு கோடி இமையோர்கள் தாம்நிற்பத்
தன்னீறு எனக்கருளித் தன்கருணை வெள்ளத்து
மன்னூற மன்னுமணி உத்தர கோசமங்கை
மின்னேறு மாட வியன்மா ளிகைபாடிப்
பொன்னேறு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.
(முன்னீறும் = முன் + ஈறும்.   பன்னூறு = பல் + நூறு.
தன்னீறு = தன் + நீறு)

4. நஞ்சமர் கண்டத்தன் அண்டத் தவர்நாதன்
மஞ்சுதோய் மாடமணி உத்தர கோசமங்கை
அஞ்சொலாள் தன்னோடும் கூடி அடியவர்கள்
நெஞ்சுளே நின்றமுதம் ஊறிக் கருணைசெய்து
துஞ்சல் பிறப்பறுப்பான் தூய புகழ்பாடிப்
புஞ்சமார் வெள்வளையீர் பொன்னூசல் ஆடாமோ.

5. ஆணோ அலியோ அரிவையோ என்றிருவர்
காணாக் கடவுள் கருணையினால் தேவர்குழாம்
நாணாமே உய்ய ஆட்கொண்டருளி நஞ்சுதனை
ஊணாக உண்டருளும் உத்தர கோசமங்கைக்
கோணார் பிறைச்சென்னிக் கூத்தன் குணம்பரவிப்
பூணார் வனமுலையீர் பொன்னூசல் ஆடாமோ.

6. மாதாடு பாகத்தன் உத்தர கோசமங்கைத்
தாதாடு கொன்றைச் சடையான் அடியாருள்
கோதாட்டி நாயேனை ஆட்கொண்டு என் தொல்பிறவித்
தீதோடா வண்ணம் திகழப் பிறப்பறுப்பான்
காதாடு குண்டலங்கள் பாடிக் கசிந்து அன்பால்
போதாடு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

7. உன்னற்கு அரியதிரு உத்தர கோசமங்கை
மன்னிப் பொலிந்திருந்த மாமறையோன் தன்புகழே
பன்னிப் பணிந்திறைஞ்சப் பாவங்கள் பற்றறுப்பான்
அன்னத்தின் மேலேறி ஆடும்_அணி மயில்போல்
என்னத்தன் என்னையும் ஆட்கொண்டான் எழில்பாடிப்
பொன்னொத்த பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.

8. கோல வரைக்குடுமி வந்து குவலயத்து
சால அமுதுண்டு தாழ்கடலின் மீதெழுந்து
ஞால[ம்] மிகப்பரிமேற் கொண்டு நமையாண்டான்
சீலம் திகழும் திருவுத்தர கோசமங்கை
மாலுக்கு அரியானை வாயார நாம்பாடிப்

பூலித்து அகங்குழைந்து பொன்னூசல் ஆடாமோ.

9. தெங்குலவு சோலைத் திருவுத்தர கோசமங்கை
தங்குலவு சோதித் தனியுருவம் வந்தருளி
எங்கள் பிறப்பறுத்திட்டு எந்தரமும் ஆட்கொள்வான்
பங்குலவு கோதையும் தானும் பணிகொண்ட
கொங்குலவு கொன்றைச் சடையான் குணம்பரவிப்
பொங்குலவு பூண்முலையீர் பொன்னூசல் ஆடாமோ.
(தெங்கு = தென்னை.   கொங்கு = தேன்.)

**08.021**

## 8.21 - கோயில் மூத்த திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)
(அந்தாதி)

1. உடையாள் உன்றன் நடுவிருக்கும், உடையாள் நடுவுள் நீ இருத்தி, 1-10
அடியேன் நடுவுள் இருவீரும் இருப்பதானால், அடியேன் உன்
அடியார் நடுவுளிருக்கும் அருளைப்புரியாய், பொன்னம்பலத்து எம்
முடியா முதலே, என் கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

2. முன்னின்று ஆண்டாய் எனை முன்னம், யானும் அதுவே முயல்வுற்று
பின்னின்று ஏவல் செய்கின்றேன், பிற்பட்டொழிந்தேன் பெம்மானே,
என்னின்று அருள் இவர நின்று போந்திடு என்னாவிடில், அடியார்
உன்னின்று இவன் ஆர் என்னாரோ, பொன்னம்பலக் கூத்துகந்தானே.

3. உகந்தானே அன்புடை அடிமைக்கு, உருகா உள்ளத்து உணர்விலியேன்
சகந்தான் அறிய முறையிட்டால் தக்கவாறு அன்று என்னாரோ,
மகந்தான் செய்து வழிவந்தார் வாழ வாழ்ந்தாய், அடியேற்கு உன்
முகந்தான் தாராவிடின் முடிவேன், பொன்னம்பலத்து எம் முழுமுதலே.

4. முழுமுதலே, ஐம்புலனுக்கும் மூவர்க்கும் என்றனக்கும்
வழிமுதலே, நின் பழவடியார் திரள் வான்குழுமிக்
கெழுமுதலே, அருள் தந்திருக்க இரங்குங் கொல்லோ என்று
அழுமதுவே அன்றி, மற்றென் செய்கேன் பொன்னம்பலத்து அரைசே.

5. அரைசே பொன்னம்பலத்தாடும் அமுதே என்று உன் அருள் நோக்கி,
இரைதேர் கொக்கொத்து இரவுபகல் ஏசற்றிருந்தே வேசற்றேன்,
கரைசேர் அடியார் களிசிறப்பக் காட்சி கொடுத்து, உன் அடியேன்பால்
பிரைசேர் பாலில் நெய்போலப் பேசாதிருந்தால் ஏசாரோ.

6. ஏசா நிற்பர் என்னை, உனக்கு அடியான் என்று பிறரெல்லாம்
பேசா நிற்பர், யான்தானும் பேணா நிற்பேன் நின்னருளே,

தேசா, நேசர் சூழ்ந்திருக்கும் திருவோலக்கம் சேவிக்க,
ஈசா, பொன்னம்பலத்தாடும் எந்தாய், இனித்தான் இரங்காயே.

7. இரங்கும் நமக்கு அம்பலக் கூத்தன் என்றென்று ஏமாந்து இருப்பேனை
அருங்கற்பனை கற்பித்து ஆண்டாய், ஆள்வாரிலி மாடு ஆவேனோ,
நெருங்கும் அடியார்களும் நீயும் நின்று நிலாவி விளையாடும்
மருங்கே சார்ந்து வர, எங்கள் வாழ்வே, வா என்று அருளாயே.

8. அருளாது ஒழிந்தால் அடியேனை அஞ்சேல் அன்பார் ஆர் இங்கு,
பொருளா என்னைப் புகுந்தாண்ட பொன்னே, பொன்னம்பலக் கூத்தா,
மருளார் மனத்தோடு உனைப் பிரிந்து வருந்துவேனை, வா என்று உன்
தெருளார் கூட்டம் காட்டாயேல், செத்தே போனாற் சிரியாரோ.

9. சிரிப்பார் களிப்பார் தேனிப்பார், திரண்டு திரண்டு உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார் மெச்சுவார், வெவ்வேறு இருந்து உன் திருநாமம்
தரிப்பார், பொன்னம்பலத்தாடும் தலைவா என்பார், அவர்முன்னே
நரிப்பாய் நாயேன் இருப்பேனோ, நம்பி, இனித்தான் நல்காயே.
(தேனிப்பார் = தியானிப்பார். தரிப்பார் = நினைப்பார்.
நரிப்பு = இகழ்ச்சி)

10. நல்காது ஒழியான் நமக்கு என்று, உன் நாமம் பிதற்றி, நயன நீர்
மல்கா, வாழ்த்தா வாய்குழறா வணங்கா மனத்தால் நினைந்துருகி,
பல்கால் உன்னைப் பாவித்துப் பரவிப், பொன்னம்பலம் என்றே
ஒல்கா நிற்கும் உயிர்க்கு இரங்கி அருளாய், என்னை உடையானே.
(மல்கா = மல்கி, வாழ்த்தா = வாழ்த்தி, . . . ஒல்கா=ஒல்கி=தளர்ந்து)

**08.022**

## 8.22 - கோயில் திருப்பதிகம்

(தில்லையில் அருளியது)
(அந்தாதி)

1. மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப் 1-10
புலனைந்தின் வழியடைத்து, அமுதே
ஊறி நின்று என்னுள் எழு பரஞ்சோதி,
உள்ளவா காண வந்தருளாய்,
தேறலின் தெளிவே, சிவபெருமானே,
திருப்பெருந்துறை உறை சிவனே,
ஈறிலாப் பதங்கள் யாவையும் கடந்த
இன்பமே, என்னுடை அன்பே.

2. அன்பினால் அடியேன் ஆவியோடு ஆக்கை
ஆனந்தமாய்க் கசிந்து உருக,

என்பரம் அல்லா இன்னருள் தந்தாய்,
யானிதற்கு இலன் ஓர் கைம்மாறு,
முன்புமாய்ப், பின்பு[ம்] முழுதுமாய்ப் பரந்த
முத்தனே, முடிவிலா முதலே,
தென்பெருந்துறையாய், சிவபெருமானே,
சீருடைச் சிவபுரத்து அரைசே.

3. அரைசனே அன்பர்க்கு, அடியனேனுடைய
அப்பனே, ஆவியோடு ஆக்கை
புரைபுரை கனியப் புகுந்து நின்று உருக்கிப்,
பொய்யிருள் கடிந்த மெய்ச்சுடரே,
திரைபொரா மன்னும் அமுதத் தெண்கடலே,
திருப்பெருந்துறை உறை சிவனே,
உரை உணர்வு இறந்து நின்று உணர்வதோர் உணர்வே,
யான் உன்னை உரைக்குமாறு உணர்த்தே.

4. உணர்ந்த மாமுனிவர் உம்பரோடு ஒழிந்தார்,
உணர்வுக்கும் தெரிவரும் பொருளே,
இணங்கிலி, எல்லா உயிர்கட்கும் உயிரே,
எனைப் பிறப்பு அறுக்கும் எம் மருந்தே,
திணிந்ததோர் இருளில் தெளிந்த தூவெளியே,
திருப்பெருந்துறை உறை சிவனே,
குணங்கள்தாம் இல்லாத இன்பமே, உன்னைக்
குறுகினேற்கு இனியென்ன குறையே.
(இணங்கிலி = இணங்கு + இலி = ஒப்பு இல்லாதவன்)

5. குறைவிலா நிறைவே, கோதிலா அமுதே,
ஈறிலாக் கொழுஞ்சுடர்க் குன்றே,
மறையுமாய் மறையின் பொருளுமாய் வந்து, என்
மனத்திடை மன்னிய மன்னே,
சிறைபெறா நீர்போல் சிந்தைவாய்ப் பாயும்
திருப்பெருந்துறை உறை சிவனே,
இறைவனே, நீ என் உடலிடம் கொண்டாய்,
இனி உன்னை என் இரக்கேனே.

6. இரந்திரந்து உருக என் மனத்துள்ளே
எழுகின்ற சோதியே, இமையோர்
சிரந்தனில் பொலியும் கமலச் சேவடியாய்,
திருப்பெருந்துறை உறை சிவனே,
நிரந்த ஆகாயம் நீர் நிலம் தீ கால்
ஆய், அவை அல்லையாய், ஆங்கே

கரந்ததோர் உருவே, களித்தனன் உன்னைக்
கண்ணுறக் கண்டுகொண்டு இன்றே.

7. இன்று எனக்கு அருளி இருள் கடிந்து, உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற, நின் தன்மை நினைப்பற நினைந்தேன்,
நீயலால் பிறிது மற்றின்மை,
சென்றுசென்று அணுவாய்த் தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்,
திருப்பெருந்துறை உறை சிவனே,
ஒன்றும் நீ அல்லை, அன்றி ஒன்றில்லை,
யார் உன்னை அறியகிற்பாரே.

8. பார் பதம் அண்டம் அனைத்துமாய் முளைத்துப்,
பரந்ததோர் படரொளிப் பரப்பே,
நீருறு தீயே, நினைவதேல் அரிய
நின்மலா, நின்னருள் வெள்ளச்
சீருறு சிந்தை எழுந்ததோர் தேனே,
திருப்பெருந்துறை உறை சிவனே,
ஆர் உறவு எனக்கு இங்கு, ஆர் அயல் உள்ளார்,
ஆனந்தம் ஆக்கும் என் சோதீ.

9. சோதியாய்த் தோன்றும் உருவமே, அருவாம்
ஒருவனே, சொல்லுதற்கு அரிய
ஆதியே, நடுவே, அந்தமே, பந்தம்
அறுக்கும் ஆனந்த மா கடலே,
தீதிலா நன்மைத் திருவருட் குன்றே,
திருப்பெருந்துறை உறை சிவனே,
யாது நீ போவது ஓர் வகை, எனக்கு அருளாய்
வந்து நின் இணையடி தந்தே.

10. தந்தது உன்தன்னை, கொண்டது என்தன்னைச்,
சங்கரா ஆர்கொலோ சதுரர்,
அந்தம் ஒன்றில்லா ஆனந்தம் பெற்றேன்,
யாது நீ பெற்றதொன்று என்பால்,
சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்,
திருப்பெருந்துறை உறை சிவனே,
எந்தையே ஈசா, உடலிடம் கொண்டாய்,
யான் இதற்கிலன் ஓர் கைம்மாறே.

08.024

## 8.24 - அடைக்கலப் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

1. செழுக்கமலத் திரளன நின் சேவடி சேர்ந்து அமைந்த, 1-10
பழுத்த மனத்து அடியர் உடன் போயினர், யான் பாவியேன்,
புழுக்கண் உடைப் புன்குரம்பைப் பொல்லாக் கல்வி ஞானமிலா
அழுக்கு மனத்து அடியேன், உடையாய் உன் அடைக்கலமே.
(குரம்பை = கூடு, உடம்பு.)

2. வெறுப்பனவே செய்யும் என் சிறுமையை நின் பெருமையினால்
பொறுப்பவனே, அராப் பூண்பவனே, பொங்கு கங்கை சடைச்
செறுப்பவனே, நின் திருவருளால் என் பிறவியை வேர்
அறுப்பவனே, உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.

3. பெரும்பெருமான், என் பிறவியை வேர் அறுத்துப் பெரும்பிச்சுத்
தரும்பெருமான், சதுரப் பெருமான், என் மனத்தினுள்ளே
வரும்பெருமான், மலரோன் நெடுமால் அறியாமல் நின்ற
அரும்பெருமான், உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.
(பிச்சு = பித்து = பேரன்பு. சதுர் = திறமை)

4. பொழிகின்ற துன்பப் புயல் வெள்ளத்தில், நின் கழற் புணைகொண்டு,
இழிகின்ற அன்பர்கள் ஏறினர் வான், யான் இடர்க்கடல்வாய்ச்
சுழிசென்று, மாதர்த் திரைபொரக், காமச் சுறவெறிய
அழிகின்றனன், உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.

5. சுருள்புரி கூழையர் சூழலிற் பட்டு, உன் திறம் மறந்து, இங்கு
இருள்புரி யாக்கையிலே கிடந்து எய்த்தனன், மைத்தடங்கண்
வெருள்புரி மான் அன்ன நோக்கிதன் பங்க, விண்ணோர் பெருமான்,
அருள்புரியாய், உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.
(கூழை = தலைமயிர், சூழல்=சூழ்ச்சி, வெருள்=அச்சம்)

6. மாழை மைப்பாவிய கண்ணியர் வன் மத்திட உடைந்து,
தாழியைப் பாவு தயிர்போல் தளர்ந்தேன், தடமலர்த்தாள்
வாழி, எப்போது வந்து எந்நாள் வணங்குவன் வல்வினையேன்,
ஆழியப்பா, உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.
(மாழை = மாவடு. தாழி=குடம், பெரும் பாண்டம்.
ஆழி = கடல் = கருணைக் கடல். )

7. மின்கணினார் நுடங்கும் இடையார் வெகுளி வலையில் அகப்பட்டுப்,
புன்கணனாய்ப் புரள்வேனைப் புரளாமற் புகுந்தருளி,

என்கணிலே அமுதூறித் தித்தித்து, என் பிழைக்கு இரங்கும்
அங்கணனே, உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.
(மின்=மின்னுதல், மின்னல். நுடங்குதல் = அசைதல்.
வெகுளி = கோபம். அங்கணன் = அம் + கண்ணன். அம் = அழகிய)

8. மாவடு வகிரன்ன கண்ணி பங்கா, நின் மலரடிக்கே
கூவிடுவாய்க், கும்பிக்கே இடுவாய், நின் குறிப்பறியேன்,
பாவிடை ஆடு குழல்போல் கரந்து பரந்தது உள்ளம்,
ஆ கெடுவேன், உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.
(வகிர் = பிளவு. கும்பி = ஒரு நரகம். பா = நெசவுப் பா = தறி)

9. பிறிவறியா அன்பர் நின் அருட்பெய் கழல் தாள் இணைக்கீழ்,
மறிவறியாச் செல்வம் வந்து பெற்றார், உன்னை வந்திப்பதோர்
நெறியறியேன், நின்னையே அறியேன், நின்னையே அறியும்
அறிவறியேன், உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.
(பிறிவு = பிரிவு. மறிவு = மீளுதல்.)

10. வழங்குகின்றாய்க்கு உன் அருளார் அமுதத்தை, வாரிக்கொண்டு
விழுங்குகின்றேன், விக்கினேன் வினையேன் என் விதியின்மையால்,
தழங்கருந் தேன் அன்ன தண்ணீர் பருகத் தந்து உய்யக்கொள்ளாய்,
அழுங்குகின்றேன், உடையாய், அடியேன் உன் அடைக்கலமே.
(தழங்கருந் தேன் = தழங்கு + அரும் + தேன்.
தழங்குதல் = முழங்குதல், ஒலி செய்தல்.
அரும்=அருமை. அழுங்குதல் = வருந்துதல்)

**08.029**

## 8.29 - அருட் பத்து

(திருப்பெருந்துறையில் அருளியது)

1. சோதியே, சுடரே, சூழொளி விளக்கே, 1-10
   சுரிகுழற் பணைமுலை மடந்தை
   பாதியே, பரனே, பால்கொள் வெண்ணீற்றாய்,
   பங்கயத்து அயனும் மால் அறியா
   நீதியே, செல்வத் திருப்பெருந் துறையில்,
   நிறைமலர்க் குருந்தம் மேவிய சீர்
   ஆதியே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
   அதெந்துவே என்று அருளாயே.

2. நிருத்தனே, நிமலா, நீற்றனே, நெற்றிக்
   கண்ணனே, விண்ணுளோர் பிரானே,
   ஒருத்தனே, உன்னை ஓலமிட்டு அலறி
   உலகெலாம் தேடியும் காணேன்,
   திருத்தமாம் பொய்கைத் திருப்பெருந் துறையில்,
   செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
   அருத்தனே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
   அதெந்துவே என்று அருளாயே.

3. எங்கள் நாயகனே, என்னுயிர்த் தலைவா,
   ஏலவார் குழலிமார் இருவர்
   தங்கள் நாயகனே, தக்கநற் காமன்
   தனதுடல் தழலெழ விழித்த
   செங்கண் நாயகனே, திருப்பெருந் துறையில்
   செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
   அங்கணா, அடியேன் ஆதரித்து அழைத்தால்
   அதெந்துவே என்று அருளாயே.

4. கமல நான்முகனும் கார்முகில் நிறத்துக்
   கண்ணனும், நண்ணுதற்கு அரிய
   விமலனே, எமக்கு வெளிப்படாய் என்ன,
   வியன்தழல் வெளிப்பட்ட எந்தாய்,
   திமில நான்மறை சேர் திருப்பெருந் துறையில்,
   செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
   அமலனே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
   அதெந்துவே என்று அருளாயே.

5. துடிகொள்நேர் இடையாள் சுரிகுழல் மடந்தை,

துணைமுலைக் கண்கள்தோய் சுவடு,
பொடிகொள் வான்தழலிற் புள்ளிபோல் இரண்டு,
பொங்கொளி தங்கு மார்பினனே,
செடிகொள் வான்பொழில்சூழ் திருப்பெருந் துறையில்,
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அடிகளே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

6. துப்பனே, தூயாய், தூய வெண்ணீறு
துதைந்தெழு துளங்கொளி வயிரத்து
ஒப்பனே, உன்னை உள்குவார் மனத்தின்
உறுசுவை அளிக்கும் ஆரமுதே,
செப்பமா மறைசேர் திருப்பெருந் துறையில்,
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அப்பனே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

7. மெய்யனே, விகிர்தா, மேருவே வில்லா
மேவலர் புரங்கள் மூன்றெரித்த
கையனே, காலால் காலனைக் காய்ந்த
கடுந்தழல் பிழம்பன்ன மேனிச்
செய்யனே, செல்வத் திருப்பெருந் துறையில்,
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
ஐயனே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

8. முத்தனே, முதல்வா, முக்கணா, முனிவா,
மொட்டறா மலர்பறித்து இறைஞ்சிப்,
பத்தியாய் நினைந்து பரவுவார் தமக்குப்,
பரகதி கொடுத்தருள் செய்யும்
சித்தனே, செல்வத் திருப்பெருந் துறையில்,
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
அத்தனே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

9. மருளனேன் மனத்தை மயக்கற நோக்கி,
மறுமையோடு இம்மையும் கெடுத்த
பொருளனே, புனிதா, பொங்கு வாளரவம்
கங்கைநீர் தங்கு செஞ்சடையாய்,
தெருளு நான்மறைசேர் திருப்பெருந் துறையில்,
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்

அருளனே, அடியேன் ஆதரித்து அழைத்தால்
அதெந்துவே என்று அருளாயே.

10. திருந்து வார்பொழில்சூழ் திருப்பெருந் துறையில்,
செழுமலர்க் குருந்தம் மேவிய சீர்
இருந்தவாறு எண்ணி, ஏசறா நினைந்திட்டு,
என்னுடை எம்பிரான் என்றென்று,
அருந்தவா நினைந்தே ஆதரித்து அழைத்தால்,
அலைகடல் அதனுளே நின்று,
பொருந்த வா, கயிலை புகு நெறி இது காண்,
போதராய் என்று அருளாயே.

**08.035**

## 8.35 - அச்சப் பத்து

(தில்லையில் அருளியது)

1. புற்றில் வாளரவும் அஞ்சேன் பொய்யர்தம் மெய்யும் அஞ்சேன் 1-10
கற்றைவார் சடையெம் அண்ணல் கண்ணுதல் பாதம் நண்ணி
மற்றுமோர் தெய்வம் தன்னை உண்டென நினைந்தெம் பெம்மாற்
கற்றிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.
(பெம்மாற்கற்றிலாதவர் =
பெம்மாற்கு + அற்றிலாதவர் / பெம்மான் + கற்றிலாதவர்)

2. வெருவரேன் வேட்கை வந்தால் வினைக்கடல் கொளினும் அஞ்சேன்
இருவரால் மாறு காணா எம்பிரான் தம்பி ரானாம்
திருவுரு அன்றி மற்றோர் தேவரெத் தேவ ரென்ன
அருவரா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.

3. வன்புலால் வேலும் அஞ்சேன் வளைக்கையார் கடைக்கண் அஞ்சேன்
என்பெலாம் உருக நோக்கி அம்பலத் தாடு கின்ற
என்பொலா மணியை ஏத்தி இனிதருள் பருக மாட்டா
அன்பிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.

4. கிளியனார் கிளவி அஞ்சேன் அவர்கிறி முறுவல் அஞ்சேன்
வெளியநீ றாடும் மேனி வேதியன் பாதம் நண்ணித்
துளியுலாம் கண்ண ராகித் தொழுதழுது உள்ளம் நெக்கிங்கு
அளியிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.
(கிறி = பொய்; வஞ்சகம். அளி = அன்பு.)

5. பிணியெலாம் வரினும் அஞ்சேன் பிறப்பினோ டிறப்பும் அஞ்சேன்
துணிநிலா அணியி னான்தன் தொழும்பரோ டழுந்தி அம்மால்

திணிநிலம் பிளந்தும் காணாச் சேவடி பரவி வெண்ணீறு
அணிகிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.

6. வாளுலாம் எரியும் அஞ்சேன் வரைபுரண் டிடினும் அஞ்சேன்
தோளுலா நீற்றன் ஏற்றன் சொற்பதம் கடந்த அப்பன்
தாளதா மரைகள் ஏத்தித் தடமலர் புனைந்து நையும்
ஆளலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.

7. தகைவிலாப் பழியும் அஞ்சேன் சாதலை முன்னம் அஞ்சேன்
புகைமுகந் தெரிகை வீசிப் பொலிந்த_அம் பலத்து ளாடும்
முகைநகைக் கொன்றை மாலை முன்னவன் பாதம் ஏத்தி
அகம்நெகா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.
(புகை முகந்தெரி = புகை முகந்த எரி)

8. தறிசெறி களிறும் அஞ்சேன் தழல்விழி உழுவை அஞ்சேன்
வெறிகமழ் சடையன் அப்பன் விண்ணவர் நண்ண மாட்டாச்
செறிதரு கழல்க ளேத்திச் சிறந்தினி திருக்க மாட்டா
அறிவிலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.
(தறி = விலங்குகளைக் கட்டும் கம்பம். செறி = செறு = தாக்கு.
உழுவை = புலி. வெறி=வாசனை/நறுமணம்)

9. மஞ்சுலாம் உருமும் அஞ்சேன் மன்னரோ டுறவும் அஞ்சேன்
நஞ்சமே அமுத மாக்கும் நம்பிரான் எம்பி ரானாய்ச்
செஞ்சவே ஆண்டு கொண்டான் திருமுண்டம் தீட்ட மாட்டாது
அஞ்சுவா ரவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.
(மஞ்சு = மேகம். உருமு = இடி. செஞ்சவே = செம்மையாக.
திரு = செல்வம்; திருநீறு. முண்டம் = நெற்றி.)

10. கோணிலா வாளி அஞ்சேன் கூற்றுவன் சீற்றம் அஞ்சேன்
நீணிலா அணியி னானை நினைந்துநைந் துருகி நெக்கு
வாணிலாங் கண்கள் சோர வாழ்த்திநின் றேத்த மாட்டா
ஆணலா தவரைக் கண்டால் அம்ம நாம் அஞ்சு மாறே.
(கோணிலா வாளி = கோள் நிலா வாளி = கொலைத்தன்மை உள்ள அம்பு.
நீணிலா = நீள் நிலா = நீண்ட நிலா.
வாணிலாம் = வாள் நிலாம் = ஒளி நிலவும்)

**08.020**

## 8.20 - திருப்பள்ளி எழுச்சி

(திருப்பெருந்துறையில் அருளியது)

1. ராகம்: பூபாளம்

போற்றி என் வாழ்முதல் ஆகிய பொருளே,
புலர்ந்தது பூங்கழற்கு இணைதுணை மலர்கொண்டு
ஏற்றி, நின் திருமுகத்து எமக்கு அருள் மலரும்
எழில் நகை கொண்டு நின் திருவடி தொழுகோம்,
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும் தண்வயல் சூழ்,
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே,
ஏற்றுயர் கொடியுடையாய், எனை உடையாய்,
எம்பெருமான், பள்ளி எழுந்தருளாயே.

2. ராகம்: சங்கராபரணம்
அருணன் இந்திரன் திசை அணுகினன், இருள்போய்
அகன்றது உதயம், நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழ எழ, நயனக்
கடிமலர் மலர, மற்றண்ணல் அங்கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன, இவை ஓர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே,
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே,
அலைகடலே, பள்ளி எழுந்தருளாயே.

3. ராகம்: காம்போதி?
கூவின பூங்குயில், கூவின கோழி,
குருகுகள் இயம்பின, இயம்பின சங்கம்,
ஓவின தாரகை, ஒளியொளி உதயத்து
ஒருப்படுகின்றது, விருப்பொடு நமக்குத்
தேவ, நற் செறிகழல் தாளிணை காட்டாய்,
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே,
யாவரும் அறிவரியாய் எமக்கு எளியாய்,
எம்பெருமான், பள்ளி எழுந்தருளாயே.

4. ராகம்: சாமா
இன்னிசை வீணையர் யாழினர் ஒரு பால்,
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒரு பால்,
துன்னிய பிணை மலர்க் கையினர் ஒரு பால்,
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒரு பால்,
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒரு பால்,
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே,
என்னையும் ஆண்டுகொண்டு இன்னருள் புரியும்
எம்பெருமான், பள்ளி எழுந்தரு ளாயே.

5. ராகம்: யதுகுல காம்போதி
பூதங்கள் தோறும் நின்றாய் எனின், அல்லால்

போக்கிலன் வரவிலன் என நினைப் புலவோர்,
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்,
கேட்டறியோம் உனைக் கண்டறி வாரைச்,
சீதங்கொள் வயல் திருப் பெருந்துறை மன்னா,
சிந்தனைக்கும் அரியாய், எங்கள் முன் வந்து
ஏதங்கள் அறுத்து, எம்மை ஆண்டருள் புரியும்
எம்பெருமான், பள்ளி எழுந்தருளாயே.

6. ராகம்:
பப்பற வீட்டிருந்து உணரும் நின் அடியார்
பந்தனை வந்தறுத்தார், அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத்து இயல்பின்
வணங்குகின்றார், அணங்கின் மணவாளா,
செப்புறு கமலங்கள் மலரும் தண்வயல் சூழ்,
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே,
இப்பிறப்பு அறுத்து எமை ஆண்டருள் புரியும்
எம்பெருமான், பள்ளி எழுந்தருளாயே.

7. ராகம்: ரீதிகௌளை
அது பழச் சுவையென, அமுதென, அறிதற்கு
அரிதென, எளிதென, அமரரும் அறியார்,
இது அவன் திருவுரு, இவன் அவன் எனவே,
எங்களை ஆண்டுகொண்டு இங்கு எழுந்தருளும்,
மதுவளர் பொழில் திரு உத்தர கோச
மங்கை உள்ளாய், திருப் பெருந்துறை மன்னா,
எது எமைப் பணிகொளுமாறு அது கேட்போம்,
எம்பெருமான், பள்ளி எழுந்தரு ளாயே.

8. ராகம்:
முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்,
மூவரும் அறிகிலர் யாவர் மற்றறிவார்,
பந்தணை விரலியும் நீயும், நின் அடியார்
பழங்குடில் தொறும் எழுந் தருளிய பரனே,
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்,
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி,
அந்தணன் ஆவதும் காட்டி வந் தாண்டாய்,
ஆரமுதே, பள்ளி எழுந்தருளாயே.

9. ராகம்: நாட்டைக்குறிஞ்சி
விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொருளே, உன தொழுப்படி யோங்கள்

மண்ணகத்தே வந்து வாழச் செய்தானே,
வண்திருப் பெருந்துறையாய், வழி அடியோம்
கண்ணகத்தே நின்று களிதரு தேனே,
கடலமுதே, கரும்பே, விரும்படியார்
எண்ணகத்தாய், உலகுக்கு உயிர் ஆனாய்,
எம்பெருமான், பள்ளி எழுந்தருளாயே.

10. ராகம்: ?
புவனியிற் போய்ப் பிறவாமையில் நாள் நாம்
போக்குகின்றோம் அவமே, இந்தப் பூமி
சிவன் உய்யக் கொள்கின்றவாறு என்று நோக்கித்,
திருப்பெருந்துறை உறைவாய், திருமாலாம்
அவன் விருப்பெய்தவும், மலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும் நீயும்,
அவனியிற் புகுந்து எமை ஆட்கொள்ள வல்லாய்,
ஆரமுதே, பள்ளி எழுந்தருளாயே.

**08.007**

## 8.07 - திருவெம்பாவை

(திருவண்ணாமலையில் அருளியது)

1. ராகம்: பூபாளம்
ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும்
சோதியை, யாம் பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே, வளருதியோ வன் செவியோ நின் செவிதான்,
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலி போய்,
வீதிவாய்க் கேட்டலுமே விம்மி விம்மி மெய்ம்மறந்து,
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டு, இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள், என்னே என்னே,
ஈதே எந்தோழி பரிசு, ஏலோர் எம்பாவாய்.
(**போது** = பூ. **அமளி** = படுக்கை. **பரிசு**=தன்மை; இயல்பு.
**ஏல்** = துயில் எழு; ஒப்புக்கொள். **ஓர்** = நினை; உணர்.)

2. ராகம்: ?
பாசம் பரஞ்சோதிக்கு என்பாய், இராப்பகல் நாம்
பேசும்போது எப்போது, இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய், நேரிழையீர்
சீசி இவையும் சிலவோ, விளையாடி
ஏசும் இடம் ஈதோ, விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதம் தந்தருள வந்தருளும்,
தேசன் சிவலோகன், தில்லைச் சிற்றம்பலத்துள்

ஈசனார்க்கு அன்பு ஆர் யாம் ஆர், ஏலோர் எம்பாவாய்.
(**அன்பு ஆர் யாம் ஆர்** = அன்பு நிறைந்த நாம் எத்தகையவர்.)

3. ராகம்: சங்கராபரணம்
முத்தன்ன வெண்ணகையாய், முன் வந்து எதிர் எழுந்து, என்
அத்தன் ஆனந்தன் அமுதன் என்று, அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய், வந்து உன் கடை திறவாய்,
பத்துடையீர் ஈசன் பழ அடியீர் பாங்குடையீர்,
புத்தடியோம் புன்மை தீர்த்து ஆட்கொண்டாற் பொல்லாதோ,
எத்தோ நின் அன்புடைமை, எல்லோம் அறியோமோ,
சித்தம் அழகியார் பாடாரோ நம் சிவனை,
இத்தனையும் வேண்டும் எமக்கு, ஏலோர் எம்பாவாய்.
(**முத்தன்ன** = முத்துப் போன்ற. **கடை** = வாயில் கதவு.
**பத்துடையீர்** = பக்தி உடையவர்களே.

4. ராகம்: சாமா
ஒண்ணித் தில நகையாய், இன்னம் புலர்ந்தின்றோ,
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ,
எண்ணிக்கொடு உள்ளவா சொல்லுகோம், அவ்வளவும்
கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே,
விண்ணுக்கு ஒரு மருந்தை, வேத விழுப்பொருளைக்,
கண்ணுக்கு இனியானைப், பாடிக் கசிந்து உள்ளம்
உண்ணெக்கு நின்று உருக, யா[ம்] மாட்டோம், நீயே வந்து
எண்ணிக் குறையில் துயில், ஏலோர் எம்பாவாய்.
(**ஒண்ணித்தில** =ஒள் + நித்தில = ஒளி உள்ள முத்து போன்ற.
**கொடு** = கொண்டு. **அவமே** = வீணே. **மருந்து** = அமிர்தம்.
**விழுப்பொருள்** = மேலான பொருள். **உண்ணெக்கு** = உள் + நெக்கு.)

5. ராகம்: யதுகுல காம்போதி
மால் அறியா நான்முகனும் காணா மலையினை, நாம்
போல் அறிவோம் என்று உள்ள பொக்கங்களே பேசும்,
பால் ஊறு தேன்வாய்ப் படிறீ, கடை திறவாய்,
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும், நம்மை ஆட்கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச், சிவனே சிவனே என்று
ஓலம் இடினும் உணராய், உணராய் காண்,
ஏலக் குழலி பரிசு, ஏலோர் எம்பாவாய்.
(**பொக்கம்** = பொய். **படிறு** = கபடம்; குறும்பு.
**ஞாலம்** = பூமி. **கோதாட்டும்** = குற்றங்களை நீக்கும்.
**ஏலக் குழலி** = மயிர்ச்சாந்து அணிந்த கூந்தலை உடையவளே.)

6. ராகம்: ?

மானே, நீ நென்னலை நாளை வந்து உங்களை
நானே எழுப்புவன் என்றலும், நாணாமே
போன திசை பகராய், இன்னம் புலர்ந்தின்றோ,
வானே நிலனே பிறவே அறிவரியான்,
தானே வந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்,
வான்வார் கழல் பாடி வந்தோர்க்கு உன் வாய் திறவாய்,
ஊனே உருகாய், உனக்கே உறும், எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடு, ஏலோர் எம்பாவாய்.
(**நென்னலை** = நேற்று. **வான்** = பெருமை.)

7. ராகம்: ரீதிகௌளை

அன்னே, இவையும் சிலவோ, பல அமரர்
உன்னற்கு அரியான், ஒருவன், இருஞ்சீரான்,
சின்னங்கள் கேட்பச் சிவன் என்றே வாய் திறப்பாய்,
தென்னா என்னா முன்னம் தீசேர் மெழுகு ஒப்பாய்,
என்னானை என்னரையன் இன்னமுது என்று எல்லோமும்
சொன்னோம் கேள் வெவ்வேறாய், இன்னம் துயிலுதியோ,
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்,
என்னே துயிலின் பரிசு, ஏலோர் எம்பாவாய்.
(**அன்னே** = தாயே. **உன்னற்கு** = எண்ணுதற்கு.
**இரும் சீரான்** = பெரும் சிறப்பை உடையவன்.
**தென்னன்** = அழகியவன்.
**என்னானை** = என் + ஆனு + ஐ = எனக்கு இனியவனை.
**அரையன்** = அரசன். **வாளா** = சும்மா.
**கிடத்தியால்** = படுத்திருக்கிறாயே.)

8. ராகம்: ?

கோழி சிலம்பச் சிலம்பும் குருகு எங்கும்,
ஏழில் இயம்ப இயம்பும் வெண் சங்கு எங்கும்,
கேழில் பரஞ்சோதி, கேழில் பரங்கருணை,
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ,
வாழி ஈதென்ன உறக்கமோ வாய் திறவாய்,
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ,
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை,
ஏழை பங்காளனையே பாடு, ஏலோர் எம்பாவாய்.
(**சிலம்பு** = ஒலி. **குருகு** = பறவை.
**ஏழில்** = எழில் = எழுதல் = திருப்பள்ளி எழுச்சி.
**கேழில்** = கேழ் + இல் = ஒப்பு இல்லாத.
**வாழி** = நீ வாழ்வாயாக (புகழ்ச்சி போல் இகழ்ச்சி).
**ஆழி** = கடல். **ஆழியான்** = கருணைக் கடல் ஆனவன்.

**ஏழை** = பெண்; பார்வதி. **ஏழை பங்காளன்** = சிவன்)

9. ராகம்:
முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே,
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப் பெற்றியனே,
உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்,
உன்னடியார் தாள் பணிவோம், ஆங்கவர்க்கே பாங்காவோம்,
அன்னவரே எம் கணவர் ஆவார், அவர் உகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்,
இன்ன வகையே எமக்கு எங்கோன் நல்குதியேல்,
என்ன குறையும் இலோம், ஏலோர் எம்பாவாய்.
(**பெற்றி** = தன்மை.)

10. ராகம்: சாரசமுகி
பாதாளம் ஏழினும் கீழ் சொற்கழிவு பாதமலர்,
போதார் புனை முடியும் எல்லாப் பொருள் முடிவே,
பேதை ஒரு பால், திருமேனி ஒன்று அல்லன்,
வேத முதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒரு தோழன், தொண்டர் உளன்,
கோதில் குலத்து அரன்தன் கோயிற் பிணாப் பிள்ளைகாள்,
ஏது அவன் ஊர், ஏது அவன் பேர், ஆர் உற்றார் ஆர் அயலார்,
ஏது அவனைப் பாடும் பரிசு, ஏலோர் எம்பாவாய்.
(**சொற்கழிவு** = சொல்லைக் கடந்தது. **ஓதுதல்**=பேசுதல்.
**உலவா**=வற்றாத; முடியாத.
**உளன்** = உள்ளன் = உள்ளத்தில் இருப்பவன்.
**கோதில்** = கோது + இல் = குற்றம் இல்லாத. **பிணா**=பெண்)

11. ராகம்: பூர்விகல்யாணி
மொய்யார் தடம் பொய்கை புக்கு, முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்து உன் கழல்பாடி,
ஐயா வழி அடியோம் வாழ்ந்தோம் காண், ஆரழல்போல்
செய்யா, வெண்ணீறாடி செல்வா, சிறு மருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா,
ஐயா நீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்,
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்,
எய்யாமற் காப்பாய் எமை, ஏலோர் எம்பாவாய்.
(**மொய்** = கூட்டம். **தடம்** = அகன்ற. **பொய்கை** = தடாகம்.
**வழி அடியோம்** = பரம்பரை பக்தர்கள்.
**செய்யன்** = சிவந்த நிறம் ஆனவன்.
**மருங்குல்** = இடை. **எய்யாமல்** = சோர்வு அடையாமல்.)

12. ராகம்: சங்கராபரணம்
ஆர்த்த பிறவித் துயர் கெட நாம் ஆர்த்தாடும்
தீர்த்தன், நற்றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன், இவ்வானும் குவலயமும் எல்லோமும்,
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி,
வார்த்தையும் பேசி வளை சிலம்ப வார் கலைகள்
ஆர்ப்பரவம் செய்ய, அணி குழல் மேல் வண்டார்ப்பப்,
பூத் திகழும் பொய்கை குடைந்து, உடையான் பொற்பாதம்
ஏத்தி, இருஞ்சுனை நீர் ஆடு, ஏலோர் எம்பாவாய்.
(**ஆர்த்த** = கட்டிய; பிணித்த.
**தீர்த்தன்** = பரிசுத்தமானவன்; கங்கையை உடையவன்.
**குவலயம்** = பூமி. **கரந்தும்** = சம்ஹாரம் செய்தும்.
**இரும் சுனை** = பெரிய சுனை.)

13. ராகம்: சாவேரி
பைங்குவளைக் கார் மலரால், செங்கமலப் பைம்போதால்,
அங்கம் குருகினத்தால், பின்னும் அரவத்தால்,
தங்கள் மலம் கழுவுவார் வந்து சார்தலினால்,
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்று இசைந்த,
பொங்கு[ம்] மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்து, நம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்,
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல் பொங்கப்,
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு, ஏலோர் எம்பாவாய்.
(**அங்கம்** = அழகு; உறுப்பு. **குருகு** = பறவை; குருக்கத்தி மலர்.
**பின்னும்** = மேலும்; பின்னி இருக்கும். **அரவம்** = ஓசை; பாம்பு.
**மலம்** = அழுக்கு; ஆணவம். **பங்கயம்** = பங்கஜம் = தாமரை.)

14. ராகம்: கர்நாடக தேவகாந்தாரி
காதார் குழை ஆடப் பைம்பூண் கலனாடக்,
கோதை குழல் ஆட வண்டின் குழாம் ஆடச்,
சீதப் புனல் ஆடிச் சிற்றம்பலம் பாடி,
வேதப் பொருள் பாடி அப்பொருள் ஆமா பாடிச்,
சோதி திறம் பாடிச் சூழ்கொன்றைத் தார் பாடி,
ஆதி திறம் பாடி அந்தம் ஆமா பாடி,
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்,
பாதத் திறம் பாடி ஆடு, ஏலோர் எம்பாவாய்.

15. ராகம்: ?
ஓர் ஒருகால் எம்பெருமான் என்றென்றே, நம்பெருமான்
சீர் ஒருகால் வாய் ஓவாள், சித்தம் களிகூர
நீர் ஒருகால் ஓவா நெடுந்தாரை கண் பனிப்பப்,

பார் ஒருகால் வந்தனையாள், விண்ணோரைத் தான் பணியாள்,
பேர் அரையற்கு இங்ஙனே பித்து ஒருவர் ஆமாறும்,
ஆர் ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்,
வார் உருவப் பூண்முலையீர், வாயார நாம் பாடி,
ஏர் உருவப் பூம்புனல் பாய்ந்து ஆடு, ஏலோர் எம்பாவாய்.
(**பேர் அரையன்** = பெரிய அரசன் = இறைவன். **ஏர் உருவம்** = அழகிய வடிவம்.)

16. ராகம்: அம்ருத வர்ஷிணி
முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்து, உடையாள்
என்னத் திகழ்ந்து, எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்து, எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னம் சிலம்பிற் சிலம்பித், திருப்புருவம்
என்னச் சிலை குலவி, நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி, அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழை, ஏலோர் எம்பாவாய்.
(**முன்னி** = முந்தி. **இட்டிடையின்** = சிறிய இடை போன்று.
**சிலை** = வானவில். **மழை** = மேகம்.)

17. ராகம்: ?
செங்கணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்,
எங்கும் இலாததோர் இன்பம் நம் பாலதாக்,
கொங்கு உண் கருங்குழலி, நந்தம்மைக் கோதாட்டி,
இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்,
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை,
அங்கண் அரசை, அடியோங்கட்கு ஆரமுதை,
நங்கள் பெருமானைப் பாடி, நலம் திகழப்
பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடு, ஏலோர் எம்பாவாய்.
(**செங்கணவன்** = செம் + கண்ணவன் = திருமால் (விஷ்ணு).
**திசைமுகன்** = நான்முகன். **கொங்கு உண்** = வாசனை உள்ள.
**சேவகன்** = வீரன்.)

18. ராகம்: சாமா
அண்ணாமலையான் அடிக்கமலம் சென்று இறைஞ்சும்,
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறு அற்றாற்போல்,
கண்ணார் இரவி கதிர் வந்து கார் கரப்பத்,
தண்ணார் ஒளி மழுங்கித் தாரகைகள் தாம் அகலப்,
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப், பிறங்கு ஒளிசேர்
விண்ணாகி மண்ணாகி, இத்தனையும் வேறாகிக்,
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல் பாடிப்,
பெண்ணே, இப்பூம்புனல் பாய்ந்து ஆடு, ஏலோர் எம்பாவாய்.

(**வீறு** = ஒளி. **கண் ஆர் இரவி** = இடம் நிறைந்த சூரியன்.
**கார் கரப்ப** = இருள் அகல. **தாரகை** = நக்ஷத்திரம்.
**கண் ஆர் அமுதம்** = பெருமை பொருந்திய அமுதம்.)

19. ராகம்: ஹிந்தோளம்
உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்று,
அங்கு அப்பழஞ்சொல் புதுக்கும் எம் அச்சத்தால்,
எங்கள் பெருமான் உனக்கு ஒன்று உரைப்போம் கேள்,
எம் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க,
எம் கை உனக்கு அல்லாது எப்பணியும் செய்யற்க,
கங்குல் பகல் எம் கண் மற்றொன்றும் காணற்க,
இங்கு இப்பரிசே எமக்கு எங்கோன் நல்குதியேல்,
எங்கு எழில் என் ஞாயிறு எமக்கு, ஏலோர் எம்பாவாய்.
(**புதுக்கும்** = புதிது ஆக்கும். **கங்குல்** = இரவு.
**நல்குதியேல்** = தருவாய் ஆகில்.
**எங்கு எழில் என்** = எந்தத் திசையில் உதித்தால் என்ன.)

20. ராகம்: மத்யமாவதி
போற்றி அருளுக நின் ஆதியாம் பாத மலர்,
போற்றி அருளுக நின் அந்தமாம் செந்தளிர்கள்,
போற்றி எல்லா உயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்,
போற்றி எல்லா உயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்,
போற்றி எல்லா உயிர்க்கும் ஈறாம் இணை அடிகள்,
போற்றி மால் நான்முகனும் காணாத புண்டரிகம்,
போற்றி யாம் உய்ய ஆட்கொண்டு அருளும் பொன்மலர்கள்,
போற்றி யாம் மார்கழி நீர் ஆட, ஏலோர் எம்பாவாய்.

## தேவாரம்

06.005

### 6.5 - போற்றித் திருத்தாண்டகம் - (எல்லாம் சிவனென்ன)

(திருநாவுக்கரசர்)

தலம்: திருவதிகை வீரட்டானம்

6287 எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி 1
எரிசுடராய் நின்ற இறைவா போற்றி
கொல்லார் மழுவாள் படையாய் போற்றி
கொல்லும் கூற்றொன்றை உதைத்தாய் போற்றி
கல்லாதார் காட்சிக்கு அரியாய் போற்றி
கற்றார் இடும்பை களைவாய் போற்றி
வில்லால் வியன் அரணம் எய்தாய் போற்றி
வீரட்டம் காதல் விமலா போற்றி.

6288 பாட்டுக்கும் ஆட்டுக்கும் பண்பா போற்றி 2
பல்லூழி ஆய படைத்தாய் போற்றி
ஓட்டகத்தே ஊணா உகந்தாய் போற்றி
உள்குவார் உள்ளத்து உறைவாய் போற்றி
காட்டகத்தே ஆடல் மகிழ்ந்தாய் போற்றி
கார்மேகம் அன்ன மிடற்றாய் போற்றி
ஆட்டுவதோர் நாகம் அசைத்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி.

6289 முல்லையங் கண்ணி முடியாய் போற்றி 3
முழுநீறு பூசிய மூர்த்தீ போற்றி
எல்லை நிறைந்த குணத்தாய் போற்றி
ஏழ்நரம்பின் ஓசை படைத்தாய் போற்றி
சில்லைச் சிரைத்தலையில் ஊணா போற்றி
சென்றடைந்தார் தீவினைகள் தீர்ப்பாய் போற்றி
தில்லைச் சிற்றம்பலம் மேயாய் போற்றி
திருவீரட்டானத்து எம் செல்வா போற்றி.

6290 சாம்பர் அகலத்து அணிந்தாய் போற்றி 4
தவநெறிகள் சாதித்து நின்றாய் போற்றி
கூம்பித் தொழுவார்கள்தம் குற்றேவலைக்

குறிக்கொண்டிருக்கும் குழகா போற்றி
பாம்பும் மதியும் புனலும் தம்மில்
பகைதீர்த்து உடன்வைத்த பண்பா போற்றி
ஆம்பல் மலர்கொண்டு அணிந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி.

6291 நீறேறு நீல மிடற்றாய் போற்றி 5
நிழல்திகழும் வெண்மழுவாள் வைத்தாய் போற்றி
கூறேறும் உமையொருபால் கொண்டாய் போற்றி
கோளரவம் ஆட்டும் குழகா போற்றி
ஆறேறு சென்னி உடையாய் போற்றி
அடியார்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
ஏறேற என்றும் உகப்பாய் போற்றி
இருங்கெடில வீரட்டத்து எந்தாய் போற்றி.

6292 பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி 6
பழையாற்றுப் பட்டீச் சுரத்தாய் போற்றி
வீடுவார் வீடருள வல்லாய் போற்றி
வேழத்து உரிவெருவப் போர்த்தாய் போற்றி
நாடுவார் நாடற்கு அரியாய் போற்றி
நாகம் அரைக்கசைத்த நம்பா போற்றி
ஆடும் ஆன் ஐந்தும் உகப்பாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி.

6293 மண் துளங்க ஆடல் மகிழ்ந்தாய் போற்றி 7
மால்கடலும் மால்விசும்பும் ஆனாய் போற்றி
விண் துளங்க மும்மதிலும் எய்தாய் போற்றி
வேழத்து உரிமூடும் விகிர்தா போற்றி
பண் துளங்கப் பாடல் பயின்றாய் போற்றி
பார்முழுதும் ஆய பரமா போற்றி
கண் துளங்கக் காமனைமுன் காய்ந்தாய் போற்றி
கார்க்கெடிலம் கொண்ட கபாலீ போற்றி.

6294 வெஞ்சினவெள் ஏறூர்தி உடையாய் போற்றி 8
விரிசடைமேல் வெள்ளம் படைத்தாய் போற்றி
துஞ்சாப் பலிதேரும் தோன்றால் போற்றி
தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
நஞ்சொடுங்கும் கண்டத்து நாதா போற்றி
நான்மறையோடு ஆறங்கம் ஆனாய் போற்றி
அஞ்சொலாள் பாகம் அமர்ந்தாய் போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி.

6295 சிந்தையாய் நின்ற சிவனே போற்றி
சீபர்ப்பதம் சிந்தை செய்தாய் போற்றி
புந்தியாய்ப் புண்டரிகத்து உள்ளாய் போற்றி
புண்ணியனே போற்றி புனிதா போற்றி
சந்தியாய் நின்ற சதுரா போற்றி
தத்துவனே போற்றியென் தாதாய் போற்றி
அந்தியாய் நின்ற அரனே போற்றி
அலைகெடில வீரட்டத்து ஆள்வாய் போற்றி. 9

6296 முக்கணா போற்றி முதல்வா போற்றி
முருகவேள் தன்னைப் பயந்தாய் போற்றி
தக்கணா போற்றி தருமா போற்றி
தத்துவனே போற்றியென் தாதாய் போற்றி
தொக்கணா என்றிருவர் தோள்கை கூப்பத்
துளங்காது எரிசுடராய் நின்றாய் போற்றி
எக்கண்ணும் கண்ணிலேன் எந்தாய் போற்றி
எறிகெடில வீரட்டத்து ஈசா போற்றி. 10

06.032

## 6.32 - போற்றித் திருத்தாண்டகம் - (கற்றவர்கள் உண்ணும்)

(திருநாவுக்கரசர்)
தலம்: திருவாரூர்

6563 கற்றவர்கள் உண்ணும் கனியே போற்றி
கழலடைந்தார் செல்லும் கதியே போற்றி
அற்றவர்கட்கு ஆரமுதம் ஆனாய் போற்றி
அல்லல் அறுத்து அடியேனை ஆண்டாய் போற்றி
மற்றொருவர் ஒப்பில்லா மைந்தா போற்றி
வானவர்கள் போற்றும் மருந்தே போற்றி
செற்றவர்தம் புரமெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி. 1

6564 வங்கமலி கடல்நஞ்சம் உண்டாய் போற்றி
மதயானை ஈருரிவை போர்த்தாய் போற்றி
கொங்கலரும் நறுங்கொன்றைத் தாராய் போற்றி
கொல்புலித்தோல் ஆடைக் குழகா போற்றி
அங்கணனே அமரர்கள்தம் இறைவா போற்றி
ஆலமர நீழலறம் சொன்னாய் போற்றி
செங்கனகத் தனிக்குன்றே சிவனே போற்றி 2

திருமூலட் டானனே போற்றி போற்றி.

6565 மலையான் மடந்தை மணாளா போற்றி 3
மழவிடையாய் நின்பாதம் போற்றி போற்றி
நிலையாக என்னெஞ்சில் நின்றாய் போற்றி
நெற்றிமேல் ஒற்றைக்கண் உடையாய் போற்றி
இலையார்ந்த மூவிலைவேல் ஏந்தீ போற்றி
ஏழ்கடலும் ஏழ்பொழிலும் ஆனாய் போற்றி
சிலையாலன்று எயிலெரித்த சிவனே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6566 பொன்னியலும் மேனியனே போற்றி போற்றி 4
பூதப் படையுடையாய் போற்றி போற்றி
மன்னியசீர் மறைநான்கும் ஆனாய் போற்றி
மறியேந்து கையானே போற்றி போற்றி
உன்னுமவர்க்கு உண்மையனே போற்றி போற்றி
உலகுக்கு ஒருவனே போற்றி போற்றி
சென்னிமிசை வெண்பிறையாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6567 நஞ்சுடைய கண்டனே போற்றி போற்றி 5
நற்றவனே நின்பாதம் போற்றி போற்றி
வெஞ்சுடரோன் பல்லிறுத்த வேந்தே போற்றி
வெண்மதியம் கண்ணி விகிர்தா போற்றி
துஞ்சிருளில் ஆடல் உகந்தாய் போற்றி
தூநீறு மெய்க்கணிந்த சோதீ போற்றி
செஞ்சடையாய் நின்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6568 சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி 6
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி
அங்கமலத்து அயனோடு மாலும் காணா
அனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6569 வம்புலவு கொன்றைச் சடையாய் போற்றி 7
வான்பிறையும் வாளரவும் வைத்தாய் போற்றி
கொம்பனைய நுண்ணிடையாள் கூறா போற்றி

குரைகழலால் கூற்றுதைத்த கோவே போற்றி
நம்புமவர்க்கு அரும்பொருளே போற்றி போற்றி
நால்வேதம் ஆறங்கம் ஆனாய் போற்றி
செம்பொனே மரகதமே மணியே போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6570 உள்ளமாய் உள்ளத்தே நின்றாய் போற்றி 8
உகப்பார் மனத்தென்றும் நீங்காய் போற்றி
வள்ளலே போற்றி மணாளா போற்றி
வானவர்கோன் தோள்துணித்த மைந்தா போற்றி
வெள்ளையேறு ஏறும் விகிர்தா போற்றி
மேலோர்க்கும் மேலோர்க்கும் மேலாய் போற்றி
தெள்ளுநீர்க் கங்கைச் சடையாய் போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6571 பூவார்ந்த சென்னிப் புனிதா போற்றி 9
புத்தேளிர் போற்றும் பொருளே போற்றி
தேவார்ந்த தேவர்க்கும் தேவே போற்றி
திருமாலுக்கு ஆழி அளித்தாய் போற்றி
சாவாமே காத்தென்னை ஆண்டாய் போற்றி
சங்கொத்த நீற்று-எம் சதுரா போற்றி
சேவார்ந்த வெல்கொடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

6572 பிரமன்தன் சிரமரிந்த பெரியோய் போற்றி 10
பெண்ணுருவோடு ஆணுருவாய் நின்றாய் போற்றி
கரநான்கும் முக்கண்ணும் உடையாய் போற்றி
காதலிப்பார்க்கு ஆற்ற எளியாய் போற்றி
அருமந்த தேவர்க்கு அரசே போற்றி
அன்றரக்கன் ஐந்நான்கு தோளும் தாளும்
சிரம்நெரித்த சேவடியாய் போற்றி போற்றி
திருமூலட் டானனே போற்றி போற்றி.

06.055

## 6.55 - போற்றித் திருத்தாண்டகம் - (வேற்றாகி விண்ணாகி)

(திருநாவுக்கரசர்)
தலம்: திருக்கயிலாயம்

6794 வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி 1
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி

ஓவாத சத்தத்து ஒலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால்வேதம் ஆனாய் போற்றி
காற்றாகி எங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6795 பிச்சாடல் பேயோடு உகந்தாய் போற்றி 2
பிறவி அறுக்கும் பிரானே போற்றி
வைச்சாடல் நன்று மகிழ்ந்தாய் போற்றி
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
பொய்ச்சார் புர[ம்]மூன்றும் எய்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
கச்சாக நாகம் அசைத்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6796 மருவார் புர[ம்]மூன்றும் எய்தாய் போற்றி 3
மருவியென் சிந்தை புகுந்தாய் போற்றி
உருவாகி என்னைப் படைத்தாய் போற்றி
உள்ளாவி வாங்கி ஒளித்தாய் போற்றி
திருவாகி நின்ற திறமே போற்றி
தேசம் பரவப் படுவாய் போற்றி
கருவாகி ஓடும் முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6797 வானத்தார் போற்றும் மருந்தே போற்றி 4
வந்தென்தன் சிந்தை புகுந்தாய் போற்றி
ஊனத்தை நீக்கும் உடலே போற்றி
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
தேனத்தை வார்த்த தெளிவே போற்றி
தேவர்க்கும் தேவனாய் நின்றாய் போற்றி
கானத்தீ ஆடல் உகந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6798 ஊராகி நின்ற உலகே போற்றி 5
ஓங்கி அழலாய் நிமிர்ந்தாய் போற்றி
பேராகி எங்கும் பரந்தாய் போற்றி
பெயராதென் சிந்தை புகுந்தாய் போற்றி
நீராவி ஆன நிழலே போற்றி
நேர்வார் ஒருவரையும் இல்லாய் போற்றி
காராகி நின்ற முகிலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6799 சில்லுருவாய்ச் சென்று திரண்டாய் போற்றி 6
தேவர் அறியாத தேவே போற்றி
புல்லுயிர்க்கும் பூட்சி புணர்த்தாய் போற்றி
போகாதென் சிந்தை புகுந்தாய் போற்றி
பல்லுயிராய்ப் பார்தோறும் நின்றாய் போற்றி
பற்றி உலகை விடாதாய் போற்றி
கல்லுயிராய் நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6800 பண்ணின் இசையாகி நின்றாய் போற்றி 7
பாவிப்பார் பாவம் அறுப்பாய் போற்றி
எண்ணும் எழுத்தும்-சொல் ஆனாய் போற்றி
என்-சிந்தை நீங்கா இறைவா போற்றி
விண்ணும் நிலனும்-தீ ஆனாய் போற்றி
மேலவர்க்கும் மேலாகி நின்றாய் போற்றி
கண்ணின் மணியாகி நின்றாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6801 இமையாது உயிராது இருந்தாய் போற்றி 8
என்-சிந்தை நீங்கா இறைவா போற்றி
உமைபாகம் ஆகத்து அணைத்தாய் போற்றி
ஊழி ஏழான ஒருவா போற்றி
அமையா வருநஞ்சம் ஆர்ந்தாய் போற்றி
ஆதி புராணனாய் நின்றாய் போற்றி
கமையாகி நின்ற கனலே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6802 மூவாய்ப் பிறவாய் இறவாய் போற்றி 9
முன்னமே தோன்றி முளைத்தாய் போற்றி
தேவாதி தேவர்தொழும் தேவே போற்றி
சென்றேறி எங்கும் பரந்தாய் போற்றி
ஆவாய் அடியேனுக்கு எல்லாம் போற்றி
அல்லல் நலிய அலந்தேன் போற்றி
காவாய் கனகத் திரளே போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி.

6803 நெடிய விசும்பொடு கண்ணே போற்றி 10
நீள அகலம் உடையாய் போற்றி
அடியும் முடியும் இகலி போற்றி
அங்கொன்று அறியாமை நின்றாய் போற்றி

கொடிய வன்கூற்றம்   உதைத்தாய் போற்றி
   கோயிலா என்சிந்தை   கொண்டாய் போற்றி
கடிய உருமொடு   மின்னே போற்றி
   கயிலை மலையானே   போற்றி போற்றி.

6804 உண்ணாது உறங்காது   இருந்தாய் போற்றி 11
   ஓதாதே வேதம்   உணர்ந்தாய் போற்றி
எண்ணா இலங்கைக்கோன்   தன்னைப் போற்றி
   இறைவிரலால் வைத்துகந்த   ஈசா போற்றி
பண்ணார் இசையின்சொல்   கேட்டாய் போற்றி
   பண்டேயென் சிந்தை   புகுந்தாய் போற்றி
கண்ணாய் உலகுக்கு   நின்றாய் போற்றி
   கயிலை மலையானே   போற்றி போற்றி.

## 2.85 - கோளறு பதிகம் - (வேயுறு தோளிபங்கன்)

(சம்பந்தர்)

தலம் : பொது
பண் : பியந்தைக் காந்தாரம்
இரண்டாம் திருமுறை

வேயுறு தோளிபங்கன் விடம் உண்ட கண்டன்
    மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்து என்
    உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
    சனிபாம் பிரண்டும் உடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
    அடியார் அவர்க்கு மிகவே

என்பொடு கொம்பொடாமை இவை மார்பிலங்க
    எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல் சூடி வந்து என்
    உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றோ டேழு பதினெட்டொ டாறும்
    உடனாய நாட்கள் அவைதாம்
அன்பொடு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
    அடியார் அவர்க்கு மிகவே

உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து
    உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றை திங்கள் முடிமேல் அணிந்து என்
    உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
    திசை தெய்வமான பலவும்
அருநெதி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
    அடியார் அவர்க்கு மிகவே

மதிநுதல் மங்கையோடு வட ஆலிருந்து
    மறையோதும் எங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமேல் அணிந்து என்

உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலன் அங்கி நமனோடு தூதர்
கொடுநோய்களான பலவும்
அதிகுணம் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

நஞ்சணி கண்டன்_எந்தை மடவாள் தனோடும்
விடையேறு[ம்] நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னி கொன்றை முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூதம் அவையும்
அஞ்சிடும் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

வாள்வரி அதளதாடை வரி கோவணத்தர்
மடவாள் தனோடும் உடனாய்
நாண்மலர் வன்னி கொன்றை நதி சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
கோளரி உழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாகமோடு கரடி
ஆளரி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

செப்பிள முலை நன்மங்கை ஒரு பாகமாக
விடையேறு செல்வன் அடைவார்
ஒப்பிள மதியும் அப்பும் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும் வாதம் மிகையான பித்தும்
வினையான வந்து நலியா
அப்படி நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

வேள்பட விழிசெய்து அன்று விடைமேல் இருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வாண்மதி வன்னி கொன்றை மலர் சூடி வந்து என்
உளமே புகுந்த அதனால்
ஏழ் கடல் சூழ் இலங்கை அரையன்தனோடும்
இடரான வந்து நலியா
ஆழ் கடல் நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

பலபல வேடமாகும் பரன் நாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோடு எருக்கு முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசையோனும் மாலும் மறையோடு தேவர்
வரு காலமான பலவும்
அலை கடல் மேரு நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

கொத்தலர் குழலியோடு விசையற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும் நாகம் முடிமேல் அணிந்து என்
உளமே புகுந்த அதனால்
புத்தரோடு அமணை வாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியார் அவர்க்கு மிகவே

தேனமர் பொழில் கொள் ஆலை விளை செந்நெல் துன்னி
வளர் செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலை ஓதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே

## 2.66 - திருநீற்றுப் பதிகம் - (மந்திரம் ஆவது நீறு)

(சம்பந்தர்)

தலம் : திரு ஆலவாய்
பண் : காந்தாரம்
இரண்டாம் திருமுறை

மந்திரம் ஆவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தரம் ஆவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திரம் ஆவது நீறு சமயத்தில் உள்ளது நீறு

செந்துவர்வாய் உமைபங்கன் திரு-ஆலவாயான் திருநீறே

வேதத்தில் உள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு
போதம் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு
ஓதத் தகுவது நீறு உண்மையில் உள்ளது நீறு
சீதப் புனல்வயல் சூழ்ந்த திரு-ஆலவாயான் திருநீறே

முத்தி தருவது நீறு முனிவர் அணிவது நீறு
சத்தியம் ஆவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பத்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு-ஆலவாயான் திருநீறே

காண இனியது நீறு கவினைத் தருவது நீறு
பேணி அணிபவர்க்கு எல்லாம் பெருமை கொடுப்பது நீறு
மாணம் தகைவது நீறு மதியைத் தருவது நீறு
சேணம் தருவது நீறு திரு-ஆலவாயான் திருநீறே

பூச இனியது நீறு புண்ணியம் ஆவது நீறு
பேச இனியது நீறு பெரும் தவத்தோர்களுக்கு எல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தமதாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு-ஆலவாயான் திருநீறே

அருத்தம் அதாவது நீறு அவலம் அறுப்பது நீறு
வருத்தம் தணிப்பது நீறு வானம் அளிப்பது நீறு
பொருத்தம் அதாவது நீறு புண்ணியர் பூசும் வெண்ணீறு
திருத்தகு மாளிகை சூழ்ந்த திரு-ஆலவாயான் திருநீறே

எயிலது அட்டது நீறு இருமைக்கும் உள்ளது நீறு
பயிலப் படுவது நீறு பாக்கியமாவது நீறு
துயிலைத் தடுப்பது நீறு சுத்தமதாவது நீறு
அயிலைப் பொலிதரு சூலத்து ஆலவாயான் திருநீறே

இராவணன் மேலது நீறு எண்ணத் தகுவது நீறு
பராவணம் ஆவது நீறு பாவம் அறுப்பது நீறு
தராவணம் ஆவது நீறு தத்துவம் ஆவது நீறு
அராவணங்கும் திருமேனி ஆலவாயான் திருநீறே

மாலொடு அயன் அறியாத வண்ணமும் உள்ளது நீறு
மேலுறை தேவர்கள் தங்கள் மெய்யது வெண்பொடி நீறு
ஏல உடம்பிடர் தீர்க்கும் இன்பம் தருவது நீறு
ஆலமது உண்ட மிடற்று எம் ஆலவாயான் திருநீறே

குண்டிகைக் கையர்களோடு சாக்கியர் கூட்டமும் கூடக்
கண்டிகைப்பிப்பது நீறு கருத இனியது நீறு
எண்டிசைப் பட்ட பொருளார் ஏத்தும் தகையது நீறு
அண்டத்தவர் பணிந்தேத்தும் ஆலவாயான் திருநீறே
(கண்டிகைப்பிப்பது = கண் + திகைப்பிப்பது)
(எண்டிசை = எண் + திசை)

ஆற்றல் அடல் விடை ஏறும் ஆலவாயான் திருநீற்றைப்
போற்றிப் புகலி நிலாவும் பூசுரன் ஞான சம்பந்தன்
தேற்றித் தென்னன் உடல் உற்ற தீப்பிணி ஆயின தீரச்
சாற்றிய பாடல்கள் பத்தும் வல்லவர் நல்லவர் தாமே

## 4.11 - நமச்சிவாய பதிகம் - (சொற்றுணை வேதியன்)

(திருநாவுக்கரசர்)

தலம் : பொது
பண் : காந்தார பஞ்சமம்
நான்காம் திருமுறை

சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை ஆவது நமச்சிவாயவே

பூவினுக்கு அருங்கலம் பொங்கு தாமரை
ஆவினுக்கு அருங்கலம் அரன் அஞ்சாடுதல்
கோவினுக்கு அருங்கலம் கோட்டம் இல்லது
நாவினுக்கு அருங்கலம் நமச்சிவாயவே

விண்ணுற அடுக்கிய விறகின் வெவ்வழல்
உண்ணிய புகிலவை ஒன்றும் இல்லையாம்
பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை
நண்ணி நின்று அறுப்பது நமச்சிவாயவே

இடுக்கண் பட்டிருக்கினும் இரந்து யாரையும்
விடுக்கில் பிரான் என்று வினவுவோம் அல்லோம்

அடுக்கற்கீழ்க் கிடக்கினும் அருளின் நாம் உற்ற
நடுக்கத்தைக் கெடுப்பது நமச்சிவாயவே

வெந்த நீறு அருங்கலம் விரதிகட்கு எ[ல்]லாம்
அந்தணர்க்கு அருங்கலம் அருமறை ஆறங்கம்
திங்களுக்கு அருங்கலம் திகழு[ம்] நீள்முடி
நங்களுக்கு அருங்கலம் நமச்சிவாயவே

சலம் இலன் சங்கரன் சார்ந்தவர்க்கு அ[ல்]லால்
நலம் இலன் நாள்தொறு[ம்] நல்குவான் நலன்
குலம் இலர் ஆகிலும் குலத்திற்கு ஏற்பதோர்
நல[ம்] மிகக் கொடுப்பது நமச்சிவாயவே

வீடினார் உலகினில் விழுமிய தொண்டர்கள்
கூடினார் அந்நெறி கூடிச் சென்றலும்
ஓடினேன் ஓடிச் சென்று உருவம் காண்டலும்
நாடினேன் நாடிற்று நமச்சிவாயவே

இல்லக விளக்கது இருள் கெடுப்பது
சொல்லக விளக்கது சோதி உள்ளது
பல்லக விளக்கது பலரும் காண்பது
நல்லக விளக்கது நமச்சிவாயவே

முன்னெறி ஆகிய முதல்வன் முக்கணன்
தன்னெறியே சரண் ஆதல் திண்ணமே
அந்நெறியே சென்று அங்கு அடைந்தவர்க்கு எலாம்
நன்னெறி ஆவது நமச்சிவாயவே

மாப்பிணை தழுவிய மாதொர் பாகத்தன்
பூப்பிணை திருந்தடி பொருந்தக் கைதொழ
நாப்பிணை தழுவிய நமச்சிவாயப் பத்து
ஏத்த வல்லார் தமக்கு இடுக்கண் இல்லையே

## 7.48 - நமச்சிவாய பதிகம் - (மற்றுப் பற்று)

(சுந்தரர்)

தலம் : பாண்டிக் கொடுமுடி
பண் : பழம் பஞ்சுரம்
ஏழாம் திருமுறை

மற்றுப் பற்று எனக்கு இன்றி நின் திருப்பாதமே மனம் பாவித்தேன்
பெற்றலும் பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்து எய்தினேன்
கற்றவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரில் பாண்டிக் கொடுமுடி
நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

இட்டன் நும்மடி ஏத்துவார் இகழ்ந்திட்ட நாள் மறந்திட்ட நாள்
கெட்ட நாள் இவை என்றலாற் கருதேன் கிளர் புனற் காவிரி
வட்ட வாசிகை கொண்டு அடி தொழுது ஏத்து பாண்டிக் கொடுமுடி
நட்டவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

ஓவு[ம்] நாள் உணர்வு அழியும் நாள் உயிர் போகும் நாள் உயர் பாடைமேல்
காவு[ம்] நாள் இவை என்றலாற் கருதேன் கிளர் புனற் காவிரிப்
பாவு தண்புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக் கொடுமுடி
நாவலா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சி வாயவே

எல்லையில் புகழ் எம்பிரான் எந்தை தம்பிரான் என்பொன் மாமணி
கல்லை உந்தி வளம் பொழிந்திழி காவிரி அதன் வாய்க்கரை
நல்லவர் தொழுது ஏத்தும் சீர்க் கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
வல்லவா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

அஞ்சினார்க்கரண் ஆதி என்றடியேனும் நான் மிக அஞ்சினேன்
அஞ்சல் என்றடித் தொண்டனேற்கு அருள் நல்கினாய்க் கழிகின்றது என்
பஞ்சின் மெல்லடிப் பாவைமார் குடைந்தாடு பாண்டிக் கொடுமுடி
நஞ்சணி கண்ட நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

ஏடு வான் இளம் திங்கள் சூடினை என்பின் கொல் புலித்தோலின் மேல்
ஆடு பாம்பது அரைக்கசைத்த அழகனே அந்தண் காவிரிப்
பாடு தண்புனல் வந்திழி பரஞ்சோதி பாண்டிக் கொடுமுடிச்
சேடனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

விரும்பி நின் மலர்ப் பாதமே நினைந்தேன் வினைகளும் விண்டனன்
நெருங்கி வண்பொழில் சூழ்ந்து எழில் பெற நின்ற காவிரிக் கோட்டிடைக்
குரும்பை மென்முலைக் கோதைமார் குடைந்தாடு[ம்] பாண்டிக் கொடுமுடி
விரும்பனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

செம்பொன் நேர் சடையாய் திரிபுரம் தீ எழச் சிலை கோலினாய்
வம்புலாம் குழலாளைப் பாகம் அமர்ந்து காவிரிக் கோட்டிடைக்
கொம்பின்மேற் குயில் கூவ மாமயில் ஆடு பாண்டிக் கொடுமுடி
நம்பனே உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

சாரணன் தந்தை எம்பிரான் எந்தை தம்பிரான் என்பொன் மாமணி என்று
பேரெணாயிர கோடி தேவர் பிதற்றி நின்று பிரிகிலார்
நாரணன் பிரமன் தொழும் கறையூரிற் பாண்டிக் கொடுமுடிக்
காரணா உனை நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே

கோணிய பிறை சூடியைக் கறையூரிற் பாண்டிக் கொடுமுடி
பேணிய பெருமானைப் பிஞ்ஞகப் பித்தனைப் பிறப்பில்லியைப்
பாணுலா வரி வண்டறை கொன்றைத் தாரனைப் படப் பாம்பரை
நாணனைத் தொண்டன் ஊரன் சொல் இவை சொல்லுவார்க்கு இல்லை துன்பமே

## 3.22 - பஞ்சாக்கரப் பதிகம் - (துஞ்சலும் துஞ்சல் இலாத)
(சம்பந்தர்)

தலம் : பொது
பண் : காந்தார பஞ்சமம்
மூன்றாம் திருமுறை

துஞ்சலும் துஞ்சல் இலாத போழ்தினும்
நெஞ்சக[ம்] நைந்து நினைமின் நாள்தொறும்
வஞ்சகம் அற்று அடி வாழ்த்த வந்த கூற்று
அஞ்ச உதைத்தன அஞ்செழுத்துமே

மந்திர[ம்] நான்மறை ஆகி வானவர்
சிந்தையுள் நின்று அவர் தம்மை ஆள்வன
செந்தழல் ஓம்பிய செம்மை வேதியர்க்கு
அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே

ஊனில் உயிர்ப்பை ஒடுக்கி ஒண்சுடர்
ஞான விளக்கினை ஏற்றி நன்புலத்து
ஏனை வழி திறந்து ஏத்துவார்க்கு இடர்
ஆன கெடுப்பன அஞ்செழுத்துமே

நல்லவர் தீயர் எனாது நச்சினர்

செல்லல் கெடச் சிவ முத்தி காட்டுவ
கொல்ல நமன் தமர் கொண்டுபோம் இடத்து
அல்லல் கெடுப்பன அஞ்செழுத்துமே

கொங்கலர் வன்மதன் வாளி ஐந்தகத்து
அங்குள பூதமும் அஞ்ச ஐம்பொழில்
தங்கரவின் படம் அஞ்சும் தம்முடை
அங்கையில் ஐவிரல் அஞ்செழுத்துமே

தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினை அடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மையினும் துணை அஞ்செழுத்துமே

வீடு பிறப்பை அறுத்து மெச்சினர்
பீடை கெடுப்பன பின்னை நாள்தொறும்
மாடு கொடுப்பன மன்னு[ம்] மா நடம்
ஆடி உகப்பன அஞ்செழுத்துமே

வண்டமர் ஓதி மடந்தை பேணின
பண்டை இராவணன் பாடி உய்ந்தன
தொண்டர்கள் கொண்டு துதித்தபின் அவர்க்கு
அண்டம் அளிப்பன அஞ்செழுத்துமே

கார்வணன் நான்முகன் காணுதற்கு ஒணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாள்தொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்கு
ஆர்வணம் ஆவன அஞ்செழுத்துமே

புத்தர் சமண் கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத்தவர்கள் தெளிந்து தேறின
வித்தக நீறணிவார் வினைப்பகைக்கு
அத்திரம் ஆவன அஞ்செழுத்துமே

நற்றமிழ் ஞான சம்பந்தன் நான்மறை
கற்றவன் காழியர் மன்னன் உன்னிய
அற்றமில் மாலை ஈரைந்தும் அஞ்செழுத்து
உற்றன வல்லவர் உம்பர் ஆவரே

## 3.49 - நமச்சிவாய பதிகம் - (காதலாகிக் கசிந்து)
(சம்பந்தர்)

தலம் : பொது
பண் : கௌசிகம் (ராகம்: பைரவி)
மூன்றாம் திருமுறை

காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார் தமை நன்னெறிக்கு உய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொருள் ஆவது
நாதன் நாமம் நமச்சிவாயவே

நம்புவார் அவர் நாவில் நவிற்றினால்
வம்பு நாண்மலர் வார்மது ஒப்பது
செம்பொனார் திலகம் உலகுக்கு எ[ல்]லாம்
நம்பன் நாமம் நமச்சிவாயவே

நெக்குள் ஆர்வம் மிகப் பெருகி நினைந்து
அக்கு மாலைகொடு அங்கையில் எண்ணுவார்
தக்க வானவராத் தகுவிப்பது
நக்கன் நாமம் நமச்சிவாயவே

இயமன் தூதரும் அஞ்சுவர் இன்சொ[ல்]லால்
நயம் வந்து ஓதவல்லார் தமை நண்ணினால்
நியமந்தான் நினைவார்க்கு இனியான் நெற்றி
நயனன் நாமம் நமச்சிவாயவே

கொல்வாரேனும் குணம் பல நன்மைகள்
இல்லாரேனும் இயம்புவர் ஆயிடின்
எல்லாத் தீங்கையும் நீங்குவர் என்பரால்
நல்லார் நாமம் நமச்சிவாயவே

மந்தரம் அன பாவங்கள் மேவிய
பந்தனையவர் தாமும் பகர்வரேல்
சிந்தும் வல்வினை செல்வமும் மல்குமால்
நந்தி நாமம் நமச்சிவாயவே

நரகம் ஏழ் புக நாடினர் ஆயினும்
உரைசெய்வாயினர் ஆயின் உருத்திரர்

விரவியே புகுவித்திடும் என்பரால்
வரதன் நாமம் நமச்சிவாயவே

இலங்கை மன்னன் எடுத்த அடுக்கல்மேல்
தலங்கொள் கால்விரல் சங்கரன் ஊன்றலும்
மலங்கி வாய்மொழி செய்தவன் உய்வகை
நலங்கொள் நாமம் நமச்சிவாயவே

போதன் போதன கண்ணனும் அண்ணல்தன்
பாதந்தான் முடி நேடிய பண்பராய்
யாதும் காண்பரிதாகி அலந்தவர்
ஓதும் நாமம் நமச்சிவாயவே

கஞ்சி மண்டையர் கையில் உண் கையர்கள்
வெஞ்சொல் மிண்டர் விரவிலர் என்பரால்
விஞ்சை அண்டர்கள் வேண்ட அமுதுசெய்
நஞ்சுண் கண்டன் நமச்சிவாயவே

நந்தி நாமம் நமச்சிவாய எனும்
சந்தையால் தமிழ் ஞான சம்பந்தன் சொல்
சிந்தையால் மகிழ்ந்து ஏத்த வல்லார் எலாம்
பந்த பாசம் அறுக்க வல்லார்களே

திருச்சிற்றம்பலம்

**04.001**

## 4.1 - கூற்றாயினவாறு

## (திருநாவுக்கரசர்)

**தலம்**: திருவதிகை வீரட்டானம் **பண்**: கொல்லி **ராகம்**: நவரோஸ்?

4159 கூற்றாயினவாறு விலக்ககிலீர் 1
கொடுமை பல செய்தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4160 நெஞ்சம் உமக்கே இடமாக வைத்தேன் 2
நினையாது ஒருபோதும் இருந்தறியேன்
வஞ்சம் இது ஒப்பது கண்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
நஞ்சாகி வந்தென்னை நலிவதனை
நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
அஞ்சேலும் என்னீர் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4161 பணிந்தாரன பாவங்கள் பாற்ற வல்லீர் 3
படுவெண்டலையில் பலிகொண்டு உழல்வீர்
துணிந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
பிணிந்தார் பொடிகொண்டு மெய் பூச வல்லீர்
பெற்றம் ஏற்று உகந்தீர் சுற்றும் வெண்டலைகொண்டு
அணிந்தீர் அடிகேள் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4162 முன்னம் அடியேன் அறியாமையினால் 4
முனிந்தென்னை நலிந்து முடக்கியிடப்
பின்னை அடியேன் உமக் காளும்பட்டேன்
சுடுகின்றது சூலை தவிர்த்தருளீர்
தன்னை அடைந்தார் வினை தீர்ப்பதன்றோ
தலையாயவர்தம் கடன் ஆவதுதான்
அன்ன நடையார் அதிகைக் கெடில

வீரட்டானத்துறை அம்மானே.

4163 காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால் 5
கரைநின்றவர் கண்டுகொள் என்று சொல்லி
நீத்தாய கயம் புக நூக்கியிட
நிலைக்கொள்ளும் வழித்துறை ஒன்றறியேன்
வார்த்தை இது ஒப்பது கேட்டறியேன்
வயிற்றோடு துடக்கி முடக்கியிட
ஆர்த்தார் புனலார் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4164 சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் 6
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்
நலம் தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன் நாமம் என் நாவில் மறந்தறியேன்
உலந்தார் தலையில் பலிகொண்டு உழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4165 உயர்ந்தேன் மனை வாழ்க்கையும் ஒண்பொருளும் 7
ஒருவர் தலை காவல் இலாமையினால்
வயந்தே உமக்கு ஆட்செய்து வாழலுற்றால்
வலிக்கின்றது சூலை தவிர்த்தருளீர்
பயந்தே என் வயிற்றின் அகம்படியே
பறித்துப் புரட்டி அறுத்து ஈர்த்திட நான்
அயர்ந்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4166 வலித்தேன் மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன் 8
வஞ்சம் மனம் ஒன்றும் இலாமையினால்
சலித்தால் ஒருவர் துணை யாரும் இல்லைச்
சங்க வெண்குழைக் காதுடை எம்பெருமான்
கலித்தே என் வயிற்றின் அகம்படியே
கலக்கி மலக்கிட்டுக் கவர்ந்து தின்ன
அலுத்தேன் அடியேன் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4167 பொன்போல மிளிர்வதொர் மேனியினீர் 9
புரிபுன் சடையீர் மெலியும் பிறையீர்
துன்பே கவலை பிணி என்று இவற்றை

நணுகாமல் துரந்து கரந்துமிடீர்
என்போலிகள் உம்மை இனித் தெளியார்
அடியார் படுவது இதுவேயாகில்
அன்பே அமையும் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

4168 போர்த்தாய் அங்கோர் ஆனையின் ஈருரி தோல் 10
புறங்காடு அரங்கா நடம் ஆட வல்லாய்
ஆர்த்தான் அரக்கன்தனை மால்வரைக் கீழ்
அடர்த்திட்டு அருள்செய்த அது கருதாய்
வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என் வேதனையான விலக்கியிடாய்
ஆர்த்தார் புனல்சூழ் அதிகைக் கெடில
வீரட்டானத்துறை அம்மானே.

**05.004**

## 5.4 - வட்டனைம் மதி சூடியை

### திருக்குறுந்தொகை (திருநாவுக்கரசர்)

**தலம்**: திருவண்ணாமலை

5260 வட்டனைம், மதி சூடியை, வானவர் 1
சிட்டனைத், திருவண்ணா மலையனை,
இட்டனை, இகழ்ந்தார் புர[ம்] மூன்றையும்
அட்டனை, அடியேன் மறந்து உய்வனோ.

5261 வானனைம், மதி சூடிய மைந்தனைத், 2
தேனனைத், திருவண்ணா மலையனை,
ஏனனை, இகழ்ந்தார் புர[ம்] மூன்றெய்த
ஆனனை, அடியேன் மறந்து உய்வனோ.

5262 மத்தனைம், மத யானை உரித்த எம் 3
சித்தனைத், திருவண்ணா மலையனை,
முத்தனைம், முனிந்தார் புர[ம்] மூன்றெய்த
அத்தனை, அடியேன் மறந்து உய்வனோ.

5263 காற்றனைக், கலக்கும் வினை போய் அறத் 4
தேற்றனைத், திருவண்ணா மலையனைக்,
கூற்றனைக், கொடியார் புர[ம்] மூன்றெய்த
ஆற்றனை, அடியேன் மறந்து உய்வனோ.

5264 மின்னனை, வினை தீர்த்து எனை ஆட்கொண்ட 5
தென்னனைத், திருவண்ணா மலையனை,
என்னனை, இகழ்ந்தார் புர[ம்] மூன்றெய்த
அன்னனை, அடியேன் மறந்து உய்வனோ.

5265 மன்றனைம், மதியாதவன் வேள்விமேல் 6
சென்றனைத், திருவண்ணா மலையனை,
வென்றனை, வெகுண்டார் புர[ம்] மூன்றையும்
கொன்றனைக், கொடியேன் மறந்து உய்வனோ.

5266 வீரனை, விடம் உண்டனை, விண்ணவர் 7
தீரனைத், திருவண்ணா மலையனை,
ஊரனை, உணரார் புர[ம்] மூன்றெய்த
ஆரனை, அடியேன் மறந்து உய்வனோ.

5267 கருவினைக், கடல்வாய் விடம் உண்ட எம் 8
திருவினைத், திருவண்ணா மலையனை,
உருவினை, உணரார் புர[ம்] மூன்றெய்த
அருவினை, அடியேன் மறந்து உய்வனோ.

5268 அருத்தனை, அரவு ஐந்தலை நாகத்தை 9
திருத்தனைத், திருவண்ணா மலையனைக்,
கருத்தனைக், கடியார் புர[ம்] மூன்றெய்த
அருத்தனை, அடியேன் மறந்து உய்வனோ.

5269 அரக்கனை அலறவ் விரல் ஊன்றிய 10
திருத்தனைத், திருவண்ணா மலையனை,
இரக்கமாய் என் உடல் உறுநோய்களைத்
துரக்கனைத், தொண்டனேன் மறந்து உய்வனோ.

**05.042**

## 5.42 - நன்று நாள்தொறும்
## திருக்குறுந்தொகை (திருநாவுக்கரசர்)
## தலம்: திருவேட்களம்

5644 நன்று நாள்தொறும் நம்வினை போயறும் 1
என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்
சென்று நீர்திரு வேட்களத் துள்ளுறை
துன்று பொற்சடை யானைத் தொழுமினே.

5645 கருப்பு வெஞ்சிலைக் காமனைக் காய்ந்தவன் 2
பொருப்பு வெஞ்சிலையால் புரம் செற்றவன்
விருப்பன் மேவிய வேட்களம் கைதொழுது
இருப்பனாகில் எனக்கு இடர் இல்லையே.

5646 வேட்களத்துறை வேதியன் எம் இறை 3
ஆக்கள் ஏறுவர் ஆன் அஞ்சும் ஆடுவர்
பூக்கள் கொண்டு அவன் பொன்னடி போற்றினால்
காப்பர் நம்மைக் கறைமிடற்று அண்ணலே.

5647 அல்லல் இல்லை அருவினைதான் இல்லை 4
மல்கு வெண்பிறை சூடும் மணாளனார்
செல்வனார் திரு வேட்களம் கைதொழ
வல்லராகில் வழியது காண்மினே.

5648 துன்பம் இல்லைத் துயர் இல்லையாம் இனி 5
நம்பனாகிய நன்மணி கண்டனார்
என்பொனார் உறை வேட்கள நன்னகர்
இன்பன் சேவடி ஏத்தி இருப்பதே.

5649 கட்டப் பட்டுக் கவலையில் வீழாதே 6
பொட்ட வல்லுயிர் போவதன் முன்னம் நீர்
சிட்டனார் திரு வேட்களம் கைதொழப்
பட்ட வல்வினை ஆயின பாறுமே.

5650 வட்ட மென்முலையாள் உமை பங்கனார் 7
எட்டும் ஒன்றும் இரண்டும் மூன்று ஆயினார்
சிட்டர் சேர் திரு வேட்களம் கைதொழுது
இட்டமாகி இரு மட நெஞ்சமே.

5651 நட்டமாடிய நம்பனை நாள்தொறும் 8
இட்டத்தால் இனிதாக நினைமினோ
வட்ட வார்முலையாள் உமை பங்கனார்
சிட்டனார் திரு வேட்களந் தன்னையே

5652 வட்ட மாமதில் மூன்றுடை வல்லரண் 9
சுட்ட கொள்கையர் ஆயினும் சூழ்ந்தவர்
குட்ட வல்வினை தீர்த்துக் குளிர்விக்கும்
சிட்டர் போல் திரு வேட்களச் செல்வரே.

5653 சேடனார் உறையும் செழு மாமலை 10

ஓடி ஆங்கெடுத்தான் முடி பத்திற
வாட ஊன்றி மலரடி வாங்கிய
வேடனார் உறை வேட்களம் சேர்மினே.

**01.092**

## 1.92 - வாசி தீரவே

### திருவிருக்குக்குறள் (திருஞான சம்பந்தர்)

**தலம்**: திருவீழிமிழலை **பண்**: குறிஞ்சி **ராகம்**: குறிஞ்சி ?

992 வாசி தீரவே காசு நல்குவீர் 1
மாசில் மிழலையீர் ஏசல் இல்லையே.

993 இறைவர் ஆயினீர் மறைகொள் மிழலையீர் 2
கறைகொள் காசினை முறைமை நல்குமே.

994 செய்ய மேனியீர் மெய்கொள் மிழலையீர் 3
பைகொள் அரவினீர் உய்ய நல்குமே.

995 நீறு பூசினீர் ஏற தேறினீர் 4
கூறு[ம்] மிழலையீர் பேறும் அருளுமே.

996 காமன் வேவ-ஓர் தூமக் கண்ணினீர் 5
நாம[ம்] மிழலையீர் சேம[ம்] நல்குமே.

997 பிணிகொள் சடையினீர் மணிகொள் மிடறினீர் 6
அணிகொள் மிழலையீர் பணிகொண் டருளுமே.

998 மங்கை பங்கினீர் துங்க மிழலையீர் 7
கங்கை முடியினீர் சங்கை தவிர்மினே.

999 அரக்கன் நெரிதர இரக்கம் எய்தினீர் 8
பரக்கு[ம்] மிழலையிர் கரக்கை தவிர்மினே.

1000 அயனு[ம்] மாலுமாய் முயலு[ம்] முடியினீர் 9
இயலு[ம்] மிழலையீர் பயனும் அருளுமே.

1001 பறிகொள் தலையினார் அறிவ தறிகிலார் 10
வெறிகொள் மிழலையீர் பிறிவ தரியதே.

1002 காழி மாநகர் வாழி சம்பந்தன் 11

வீழி மிழலைமேல் தாழு[ம்] மொழிகளே.

**05.060**

### 5.60 - ஏதும் ஒன்றும்
### திருக்குறுந்தொகை (திருநாவுக்கரசர்)
### தலம்: திருமாற்பேறு

5830 ஏதும் ஒன்றும் அறிவிலர் ஆயினும் 1
ஓதி அஞ்செழுத்தும் உணர்வார்கட்குப்
பேதம் இன்றி அவரவர் உள்ளத்தே
மாதும் தாமும் மகிழ்வர் மாற்பேறரே.

5831 அச்சமில்லை நெஞ்சே அரன் நாமங்கள் 2
நிச்சலும் நினையாய் வினை போயறக்
கச்ச மாவிடம் உண்ட கண்டா என
வைச்ச மாநிதி ஆவர் மாற்பேறரே.

5832 சாத்திரம் பல பேசும் சழக்கர்காள் 3
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளு[ம்] மாற்பேறரே.

5833 இருந்து சொல்லுவன் கேண்மின்கள் ஏழைகாள் 4
அருந்தவம் தரும் அஞ்செழுத்து ஓதினால்
பொருந்து நோய்பிணி போகத் துரப்பதோர்
மருந்தும் ஆகுவர் மன்னு[ம்] மாற்பேறரே.

5834 சாற்றிச் சொல்லுவன் கேண்மின் தரணியீர் 5
ஏற்றின்மேல் வருவான் கழல் ஏத்தினால்
கூற்றை நீக்கிக் குறைவறுத்து ஆள்வதோர்
மாற்றிலாச் செம்பொன் ஆவர் மாற்பேறரே.

5835 ஈட்டும் மாநிதி சால இழக்கினும் 6
வீட்டும் காலன் விரைய அழைக்கினும்
காட்டில் மாநடம் ஆடுவாய் கா எனில்
வாட்டம் தீர்க்கவும் வல்லர் மாற்பேறரே.

5836 ஐயனே அரனே என்று அரற்றினால் 7,8,9
உய்யலாம் உலகத்தவர் பேணுவர்
செய்ய பாதம் இரண்டும் நினையவே

வையம் ஆளவும் வைப்பர் மாற்பேறரே.

5837 உந்திச் சென்று மலையை எடுத்தவன் 10
சந்து தோளொடு தாளிற ஊன்றினான்
மந்தி பாய் பொழில் சூழு[ம்] மாற்பேறென
அந்தம் இல்லதோர் இன்பம் அணுகுமே.

**05.001**

## 5.1 - அன்னம் பாலிக்கும்

## திருக்குறுந்தொகை (திருநாவுக்கரசர்)

**தலம்**: கோயில் ( = தில்லை = சிதம்பரம்) **ராகம்**: மாயா மாளவ கௌளை

5229 அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம் 1
பொன்னம் பாலிக்கு[ம்] மேலும் இப் பூ மிசை
என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற
இன்னம் பாலிக்குமோ இப் பிறவியே.

5230 அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டு நீர் 2
சுரும்பற்றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற்றச் சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற்றப் புலியூர் எம்பிரானையே.

5231 அரிச்சுற்ற வினையால் அடர்ப்புண்டு நீர் 3
எரிச்சுற்றக் கிடந்தார் என்று அயலவர்
சிரிச்சுற்றுப் பல பேசப்படா முனம்
திருச் சிற்றம்பலம் சென்றடைந்து உய்ம்மினே.

5232 அல்லல் என் செயும் அரு வினை என் செயும் 4
தொல்லை வல் வினைத் தொந்தம்தான் என் செயும்
தில்லை மா நகர்ச் சிற்றம்பலவனார்க்கு
எல்லை இல்லதோர் அடிமை பூண்டேனுக்கே.

5233 ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம் 5
நான் நிலாவி இருப்பன் என் நாதனைத்
தேன் நிலாவிய சிற்றம்பலவனார்
வான் நிலாவி இருக்கவும் வைப்பரே.

5234 சிட்டர் வானவர் சென்று வரங்கொளும் 6
சிட்டர் வாழ் தில்லைச் சிற்றம்பலத்துறை
சிட்டன் சேவடி கைதொழச் செல்லும்-அச்

சிட்டர்பால் அணுகான் செறு காலனே.

5235 ஒருத்தனார் உலகங்கட்கு ஒரு சுடர் 7
திருத்தனார் தில்லைச் சிற்றம்பலவனார்
விருத்தனார் இளையார் விடம்-உண்ட எம்
அருத்தனார் அடியாரை அறிவரே.

5236 விண்ணிறைந்ததோர் வெவ்வழலின் உரு 8
எண்ணிறைந்த இருவர்க்கு அறிவொணாக்
கண்ணிறைந்த கடிபொழில் அம்பலத்து
உண்ணிறைந்து நின்றாடும் ஒருவனே.
(விண்ணிறைந்த = விண் + நிறைந்த, உண்ணிறைந்து = உள் + நிறைந்து)

5237 வில்லை வட்டப்பட வாங்கி அவுணர்தம் 9
வல்லை வட்டம் மதில் மூன்றுடன் மாய்த்தவன்
தில்லை வட்டம் திசை கைதொழுவார் வினை
ஒல்லை வட்டம் கடந்து ஓடுதல் உண்மையே.

5238 நாடி நாரணன் நான்முகன் என்றிவர் 10
தேடியும் திரிந்தும் காண வல்லரோ
மாட மாளிகை சூழ் தில்லை அம்பலத்து
ஆடி பாதம் என் நெஞ்சுள் இருக்கவே.

5238 மதுர வாய்மொழி மங்கையோர் பங்கினன் 11
சதுரன் சிற்றம்பலவன் திருமலை
அதிர ஆர்த்தெடுத்தான் முடி பத்திற
மிதிகொள் சேவடி சென்றடைந்து உய்ம்மினே.

**05.099**

### 5.99 - பாவமும் பழி பற்றற
### பாவநாசத் திருக்குறுந்தொகை (திருநாவுக்கரசர்)
### தலம்: பொது

6224 பாவமும் பழி பற்றற வேண்டுவீர் 1
ஆவில் அஞ்சு உகந்தாடும் அவன் கழல்
மேவராய் மிகவும் மகிழ்ந்து உள்குமின்
காவலாளன் கலந்து அருள் செய்யுமே.

6225 கங்கை ஆடில் என் காவிரி ஆடில் என் 2
கொங்கு தண் குமரித் துறை ஆடில் என்

ஓங்கு மா கடல் ஓத நீர் ஆடில் என்
எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே.

6226 பட்டர் ஆகில் என் சாத்திரம் கேட்கில் என் 3
இட்டும் அட்டியும் ஈ தொழில் பூணில் என்
எட்டும் ஒன்றும் இரண்டும் அறியில் என்
இட்டம் ஈசன் எனாதவர்க்கு இல்லையே.

6227 வேதம் ஓதில் என் வேள்விகள் செய்யில் என் 4
நீதிநூல் பல நித்தல் பயிற்றில் என்
ஓதி அங்கமோர் ஆறும் உணரில் என்
ஈசனை உள்குவார்க்கு அன்றி இல்லையே.

6228 காலை சென்று கலந்து நீர் மூழ்கில் என் 5
வேலை தோறும் விதிவழி நிற்கில் என்
ஆலை வேள்வி அடைந்தது வேட்கில் என்
ஏல ஈசன் என்பார்க்கு அன்றி இல்லையே.

6229 கான நாடு கலந்து திரியில் என் 6
ஈனம் இன்றி இருந்தவம் செய்யில் என்
ஊனை உண்டல் ஒழித்து வான் நோக்கில் என்
ஞானன் என்பவர்க்கு அன்றி நன்கில்லையே.

6230 கூட வேடத்தராகிக் குழுவில் என் 7
வாடி ஊனை வருத்தித் திரியில் என்
ஆடல் வேடத்தன் அம்பலக் கூத்தனைப்
பாடலாளர்க்கு அல்லால் பயன் இல்லையே.

6231 நன்று நோற்கில் என் பட்டினி ஆகில் என் 8
குன்றம் ஏறி இருந்தவம் செய்யில் என்
சென்று நீரில் குளித்துத் திரியில் என்
என்றும் ஈசன் என்பார்க்கு அன்றி இல்லையே.

6232 கோடி தீர்த்தம் கலந்து குளித்து அவை 9
ஆடினாலும் அரனுக்கு அன்பு இல்லையேல்
ஓடு[ம்] நீரினை ஓட்டைக் குடத்து அட்டி
மூடி வைத்திட்ட மூர்க்கனோடு ஒக்குமே.

6233 மற்று நற்றவம் செய்து வருந்தில் என் 10
பொற்றை உற்றெடுத்தான் உடல் புக்கிறக்
குற்ற நற்குரையார் கழற் சேவடி

பற்றிலாதவர்க்குப் பயன் இல்லையே.

## 07.028

### 7.28 - பொடியார் மேனியனே

(சுந்தரர்)

**தலம்**: திருக்கடவூர் **பண்**: நட்டராகம் **ராகம்**: பந்துவராளி

7503 7.28.1 1

பொடி ஆர் மேனியனே, புரிநூல் ஒரு பால் பொருந்த,
வடி ஆர் மூவிலை வேல், வளர் கங்கையின் மங்கையொடும்,
கடி ஆர் கொன்றையனே, கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அடிகேள், என் அமுதே, எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7504 7.28.2 2

பிறை ஆரும் சடையாய், பிரமன் தலையில் பலி கொள்
மறை ஆர் வானவனே, மறையின் பொருள் ஆனவனே,
கறை ஆரும் மிடற்றாய், கடவூர்தனுள் வீரட்டத்து எம்
இறைவா, என் அமுதே, எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7505 7.28.3 3

அன்று ஆலின் நிழல் கீழ் அறம் நால்வர்க்கு அருள்புரிந்து,
கொன்றாய் காலன் உயிர், கொடுத்தாய் மறையோனுக்கு, மான்
கன்று ஆரும் கரவா, கடவூர்த் திரு வீரட்டத்துள்
என் தாதை, பெருமான், எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7506 7.28.4 4

போர் ஆரும் கரியின் உரி போர்த்துப் பொன் மேனியின் மேல்,
வார் ஆரும் முலையாள் ஒரு பாகம் மகிழ்ந்தவனே,
கார் ஆரும் மிடற்றாய், கடவூர்தனுள் வீரட்டானத்து
ஆரா என் அமுதே, எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7507 7.28.5 5

மை ஆர் கண்டத்தினாய், மத மா உரி போர்த்தவனே,
பொய்யாது என் உயிருள் புகுந்தாய், இன்னம் போந்தறியாய்,
கை ஆர் ஆடரவா, கடவூர்தனுள் வீரட்டத்து எம்
ஐயா, என் அமுதே, எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7508 7.28.6 6

மண் நீர் தீ வெளி கால் வரு பூதங்கள் ஆகி மற்றும்
பெண்ணோடு ஆண் அலி ஆய்ப் பிறவா உரு ஆனவனே,

கண் ஆர் உள் மணியே, கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அண்ணா, என் அமுதே, எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7509 7.28.7 7
எரி ஆர் புன்சடை மேல் இள நாகம் அணிந்தவனே,
நரி ஆரும் சுடலை நகு வெண் தலை கொண்டவனே,
கரி ஆர் ஈர் உரியாய், கடவூர்தனுள் வீரட்டத்து எம்
அரியாய், என் அமுதே, எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7510 7.28.8 8
வேறா உன் அடியேன் விளங்கும் குழைக் காது உடையாய்,
தேறேன் உன்னை அல்லால், சிவனே என் செழும் சுடரே,
காறார் வெண் மருப்பா, கடவூர்த் திரு வீரட்டத்துள்
ஆறார் செஞ்சடையாய், எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7511 7.28.9 9
அயனோடு அன்று அரியும் அடியும் முடி காண்பு அரிய
பயனே, எம் பரனே, பரம் ஆய பரம் சுடரே,
கயம் ஆரும் சடையாய், கடவூர்த் திரு வீரட்டத்துள்
அயனே, என் அமுதே, எனக்கு ஆர் துணை நீ அ[ல்]லதே.

7512 7.28.10 10
கார் ஆரும் பொழில் சூழ் கடவூர்த் திரு வீரட்டத்துள்,
ஏர் ஆரும் இறையைத் துணையா எழில் நாவலர் கோன்,
ஆரூரன் அடியான், அடித் தொண்டன் உரைத்த தமிழ்,
பாரோர் ஏத்த வல்லார் பர லோகத்து இருப்பாரே.

**07.091**

## 7.91 - பாட்டும் பாடி

(சுந்தரர்)

**தலம்**: திருவொற்றியூர் **பண்**: குறிஞ்சி **ராகம்**: குறிஞ்சி ?

8147 பாட்டும் பாடிப் பரவித் திரிவார் 1
ஈட்டும் வினைகள் தீர்ப்பார் கோயில்
காட்டும் கலமும் திமிலும் கரைக்கே
ஓட்டும் திரைவாய் ஒற்றி யூரே.

8148 பந்தும் கிளியும் பயிலும் பாவை 2
சிந்தை கவர்வார் செந்தீ வண்ணர்
எந்தம் அடிகள் இறைவர்க் கிடம்போல்

உந்தும் திரைவாய் ஒற்றி யூரே.

8149 பவளக் கனிவாய்ப் பாவை பங்கன் 3
கவளக் களிற்றின் உரிவை போர்த்தான்
தவழும் மதிசேர் சடையாற் கிடம்போல்
உகளும் திரைவாய் ஒற்றி யூரே.

8150 என்ன தெழிலும் நிறையும் கவர்வான் 4
புன்னை மலரும் புறவில் திகழும்
தன்னை முன்னம் நினைக்கத் தருவான்
உன்னப் படுவான் ஒற்றி யூரே.

8151 பணங்கொள் அரவம் பற்றிப் பரமன் 5
கணங்கள் சூழக் கபாலம் ஏந்தி
வணங்கும் இடைமென் மடவார் இட்ட
உணங்கல் கவர்வான் ஒற்றி யூரே.

8152 படையார் மழுவன் பால்வெண் ணீற்றன் 6
விடையார் கொடியன் வேத நாவன்
அடைவர் வினைகள் அறுப்பான் என்னை
உடையான் உறையும் ஒற்றி யூரே.

8153 சென்ற புரங்கள் தீயில் வேவ 7
வென்ற விகிர்தன் வினையை வீட்ட
நன்று நல்ல நாதன் நரையே
றொன்றை உடையான் ஒற்றி யூரே.

8154 கலவம் மயில்போல் வளைக்கை நல்லார் 8
பலரும் பரவும் பவளப் படியான்
உலகில் உள்ளார் வினைகள் தீர்ப்பான்
உலவும் திரைவாய் ஒற்றி யூரே.

8155 பற்றி வரையை எடுத்த அரக்கன் 9
இற்று முரிய விரலால் அடர்த்தார்
எற்றும் வினைகள் தீர்ப்பார் ஓதம்
ஒற்றும் திரைவாய் ஒற்றி யூரே.

8156 ஒற்றி யூரும் அரவும் பிறையும் 10
பற்றி யூரும் பவளச் சடையான்
ஒற்றி யூர்மேல் ஊரன் உரைத்த
கற்றுப் பாடக் கழியும் வினையே.

**05.090**

## 5.90 - மாசில் வீணையும்

### தனித் திருக்குறுந்தொகை (திருநாவுக்கரசர்)

**தலம்**: பொது

6112 மாசில் வீணையும் மாலை மதியமும் 1
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

6113 நமச்சி வாயவே ஞானமும் கல்வியும் 2
நமச்சி வாயவே நான்-அறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

6114 ஆள்-ஆகார் ஆள்-ஆனாரை அடைந்து உய்யார் 3
மீளா ஆட்செய்து மெய்ம்மையுள் நிற்கிலார்
தோளாத சுரையோ தொழும்பர் செவி
வாளா மாய்ந்து மண்ணாகிக் கழிவரே.

6115 நடலை வாழ்வு கொண்டு என் செய்தீர் நாணிலீர் 4
சுடலை சேர்வது சொற்பிர மாணமே
கடலின் நஞ்சு அமுதுண்டவர் கைவிட்டால்
உடலினார் கிடந்து ஊர் முனி பண்டமே.

6116 பூக் கைக்கொண்டு அரன் பொன்னடி போற்றிலார் 5
நாக்கைக் கொண்டு அரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக்கே இரை தேடி அலமந்து
காக்கைக்கே இரையாகிக் கழிவரே.

6117 குறிகளும் அடையாளமும் கோயிலும் 6
நெறிகளும் அவர் நின்றதோர் நேர்மையும்
அறிய ஆயிரம் ஆரணம் ஓதிலும்
பொறியிலீர் மனம் என்கொல் புகாததே.

6118 வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் 7
தாழ்த்தச் சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே.

6119 எழுது பாவை நல்லார் திறம் விட்டு நான் 8
தொழுது போற்றி நின்றேனையும் சூழ்ந்துகொண்டு
உழுத சால்வழியே உழுவான் பொருட்டு
இழுதை நெஞ்சம் இது என் படுகின்றதே.

6120 நெக்கு நெக்கு நினைபவர் நெஞ்சுளே 9
புக்கு நிற்கும் பொன்னார்சடைப் புண்ணியன்
பொக்க[ம்] மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பவர் அவர்தம்மை நாணியே.

6121 விறகில் தீயினன் பாலிற்படு நெய்போல் 10
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவு கோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன் நிற்குமே.

**03.097**

### 3.97 - திடமலி மதிளணி

### திருமுக்கால் (திருஞான சம்பந்தர்)

**தலம்**: திருச்சிறுகுடி **பண்**: சாதாரி ராகம்:

3842 திடமலி மதிளணி சிறுகுடி மேவிய 1
படமலி அரவுடை யீரே
படமலி அரவுடை யீருமைப் பணிபவர்
அடைவதும் அமருல கதுவே.

3843 சிற்றிடை யுடன்மகிழ் சிறுகுடி மேவிய 2
சுற்றிய சடைமுடி யீரே
சுற்றிய சடைமுடி யீரும தொழுகழல்
உற்றவர் உறுபிணி இலரே.

3844 தெள்ளிய புனலணி சிறுகுடி மேவிய 3
துள்ளிய மானுடை யீரே
துள்ளிய மானுடை யீரும தொழுகழல்
உள்ளுதல் செயநலம் உறுமே.

3845 செந்நெல வயலணி சிறுகுடி மேவிய 4
ஒன்னலர் புரமெரித் தீரே
ஒன்னலர் புரமெரித் தீருமை உள்குவார்
சொன்னலம் உடையவர் தொண்டே.

3846 செற்றினில் மலிபுனற் சிறுகுடி மேவிய 5
பெற்றிகொள் பிறைமுடி யீரே
பெற்றிகொள் பிறைமுடி யீருமைப் பேணிநஞ்சு
அற்றவர் அருவினை இலரே.
(செற்றினில் = சேற்றினில்; நஞ்சு = நைந்து)

3847 செங்கயல் புனலணி சிறுகுடி மேவிய 6
மங்கையை இடமுடை யீரே
மங்கையை இடமுடை யீருமை வாழ்த்துவார்
சங்கைய திலர்நலர் தவமே.

3848 செறிபொழில் தழுவிய சிறுகுடி மேவிய 7
வெறிகமழ் சடைமுடி யீரே
வெறிகமழ் சடைமுடி யீருமை விரும்பிமெய்ந்
நெறியுணர் வோருயர்ந் தோரே.

3849 திசையவர் தொழுதெழு சிறுகுடி மேவிய 8
தசமுகன் உரநெரித் தீரே
தசமுகன் உரநெரித் தீருமைச் சார்பவர்
வசையறும் அதுவழி பாடே.

3850 செருவரை வயலமர் சிறுகுடி மேவிய 9
இருவரை அசைவுசெய் தீரே
இருவரை அசைவுசெய் தீருமை ஏத்துவார்
அருவினை யொடுதுயர் இலரே.

3851 செய்த்தலை புனலணி சிறுகுடி மேவிய 10
புத்தரொ டமண்புறத் தீரே
புத்தரொ டமண்புறத் தீருமைப் போற்றுதல்
பத்தர்கள் தம்முடைப் பரிசே.

3852 தேனமர் பொழிலணி சிறுகுடி மேவிய 11
மானமர் கரமுடை யீரே
மானமர் கரமுடை யீருமை வாழ்த்திய
ஞானசம் பந்தன தமிழே.

## திருமுறைகள் 8 - 12 (சில பாடல்கள்)

## 8.6 திருவாசகம் (மாணிக்க வாசகர்)
## நீத்தல் விண்ணப்பம்

8.6.1 கடையவனேனைக் கருணையினால் கலந்து ஆண்டுகொண்ட
விடையவனே, விட்டிடுதி கண்டாய், விறல் வேங்கையின் தோல்
உடையவனே, மன்னும் உத்தரகோச மங்கைக்கு அரசே,
சடையவனே, தளர்ந்தேன், எம்பிரான் என்னைத் தாங்கிக்கொள்ளே. 1

## 9.1 திருவிசைப்பா (திருமாளிகைத் தேவர்)
**தலம்:** கோயில் ( = தில்லை = சிதம்பரம்)

9.6 நீறணி பவளக் குன்றமே, நின்ற 6
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே,
வேறணி புவன போகமே, யோக
வெள்ளமே, மேருவில் வீரா,
ஆறணி சடை-எம் அற்புதக் கூத்தா,
அம்பொன்செய் அம்பலத் தரசே,
ஏறணி கொடி-எம் ஈசனே, உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே.

## 9.29 திருப்பல்லாண்டு (சேந்தனார்)
**தலம்:** கோயில் ( = தில்லை = சிதம்பரம்)

9.288 மன்னுக தில்லை; வளர்க நம் பத்தர்கள்; வஞ்சகர் போய் அகல; 1
பொன்னின் செய் மண்டபத்து உள்ளே புகுந்து, புவனி எல்லாம் விளங்க,
அன்ன நடை மடவாள் உமை கோன் அடியோமுக்கு அருள் புரிந்து,
பின்னைப் பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

9.289 மிண்டு மனத்தவர் போமின்கள், 2
மெய்யடியார்கள் விரைந்து வம்மின்,
கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு
ஆட்செய்மின், குழாம் புகுந்து
அண்டம் கடந்த பொருள், அளவில்லதோர்
ஆனந்த வெள்ளப் பொருள்,
பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் என்றே
பல்லாண்டு கூறுதுமே.

## 10 திருமந்திரம் (திருமூலர்)

10.7.30.3 ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் 2066
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லை நும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர் நினைந்து உய்மினே.

10.9.6.9 சிவசிவ என்கிலர் தீவினையாளர் 2667
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரும் ஆவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## 11.4 அற்புதத் திருவந்தாதி (காரைக்கால் அம்மையார்)

11.4.1 பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல் 1
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்பது இடர்.

11.4.53 எனக்கினிய எம்மானை ஈசனையான் என்றும் 53
மனக்கினிய வைப்பாக வைத்தேன் - எனக்கவனைக்
கொண்டேன் பிரானாகக் கொள்வதுமே இன்புற்றேன்
உண்டே எனக்கரிய தொன்று.

## 11.6 பொன்வண்ணத்து அந்தாதி (சேரமான் பெருமாள் நாயனார்)

11.6.1 பொன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மேனி; பொலிந்திலங்கும் 1
மின்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் வீழ்சடை; வெள்ளிக்குன்றம்
தன்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் மால்விடை; தன்னைக்கண்ட
என்வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் ஆகிய ஈசனுக்கே.

11.6.46 அந்தணராம் இவர் ஆருர் உறைவது என்றேன், அதுவே 46
சந்தணை தோளி என்றார்; தலையாய சலவர் என்றேன்,
பந்தணை கையாய் அதுவும் உண்டு என்றார்; உமை அறியக்
கொந்தணை தாரீர் உரைமின் என்றேன், துடி கொட்டினாரே.
(ஆருர் = திருவாரூர் / ஆர் + ஊர் = யாருடைய ஊர் = எந்த ஊர்);
சலவர் = வஞ்சகர் / சலத்தை உடையவர்;
உமை = பார்வதி / உ[ம்]மை)

11.6.70 கூறுமின் ஈசனைச், செய்ம்மின் குற்றேவல், குளிர்மின் கண்கள், 70
தேறுமின் சித்தம், தெளிமின் சிவனைச், செறுமின் செற்றம்,
ஆறுமின் வேட்கை, அறுமின் அவலம், இவை நெறியா
ஏறுமின் வானத்து, இருமின் விருந்தாய் இமையவர்க்கே.

**11.22** **சிவபெருமான் திருவந்தாதி (கபிலதேவ நாயனார்)**

11.22.2 மாலை ஒருபால் மகிழ்ந்தானை, வண்கொன்றை 2
மாலை ஒருபால் முடியானை, - மாலை
ஒளியானை, உத்தமனை, உண்ணாநஞ்சு உண்டற்கு
ஒளியானை, ஏத்தி உளம்

11.22.81 பேரானை ஈருரிவை போர்த்தானை, ஆயிரத்தெண் 81
பேரானை, ஈருருவம் பெற்றானைப், - பேராநஞ்சு
உண்டானை, உத்தமனை, உள்காதார்க்கு எஞ்ஞான்றும்
உண்டாம்நாள் அல்ல உயிர்.

**11.23** **சிவபெருமான் திருவந்தாதி (பரணதேவ நாயனார்)**

11.23.91 ஆறுடையர்; நஞ்சுடையர்; ஆடும் அரவுடையர்; 91
ஆறுடையர் காலம்; அமைவுடையர்; - ஆறுடைய
சித்தத்தீர், செல்வத் திருக்கயிலை சேர்கின்ற
சித்தத்தீர் எல்லார்க்கும் சேர்வு.

**12** **பெரிய புராணம் (சேக்கிழார்)**

1 உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் 1
நிலவுலாவிய நீர் மலி வேணியன்
அலகிற் சோதியன் அம்பலத்து ஆடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்.

2 ஊனடைந்த உடம்பின் பிறவியே 2
தானடைந்த உறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப் பொழில் தில்லையுள்
மாநடஞ்செய் வரதர் பொற்றாள் தொழ.

4 மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன் 4
துதி செயும் நாயன்மார் தூய சொல்மலர்ப்

பொதிநலன் நுகர்தரு புனிதர் பேரவை
விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே.

550 மலர்மிசை அயனும் மாலும் காணுதற்கரிய வள்ளல் 550
பலர்புகழ் வெண்ணெய்நல்லூர் ஆவணப் பழமை காட்டி
உலகுய்ய ஆண்டுகொள்ளப் பெற்றவர் பாதம் உன்னித்
தலைமிசை வைத்து வாழும் தலைமை நம் தலைமை ஆகும்.

1776 இறவாத இன்ப அன்பு வேண்டிப் பின் வேண்டுகின்றார், 1776
பிறவாமை வேண்டும், மீண்டும் பிறப்பு உண்டேல், உன்னை என்றும்
மறவாமை வேண்டும், இன்னும் வேண்டு[ம்], நான் மகிழ்ந்து பாடி
அறவா, நீ ஆடும்போது உன் அடியின்கீழ் இருக்க என்றார்.

## வாழ்த்து

**03.054** **திருப்பாசுரம் (திருஞான சம்பந்தர்)**

**தலம்**: பொது **பண்**: கௌசிகம் **ராகம்**: பைரவி

3372 வாழ்க அந்தணர் வானவர் ஆனினம், 1
வீழ்க தண்புனல், வேந்தனும் ஓங்குக,
ஆழ்க தீயதெல்லாம், அரன் நாமமே
சூழ்க, வையகமும் துயர் தீர்கவே.

**??** **??**

?? வையம் நீடுக, மாமழை மன்னுக, ??
மெய் விரும்பிய அன்பர் விளங்குக,
சைவ நன்னெறி தான்தழைத் தோங்குக,
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே.

**-** **கந்த புராணம் (கச்சியப்ப சிவாசாரியார்)**

?? வான்முகில் வழாது பெய்க! ??
மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க!
குறைவிலாது உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க!

நற்றவம் வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவ நீதி
விளங்குக உலகம் எல்லாம்!